## இன்றைய வேளாண் செய்திகள்

## தமிழகத்தில் இன்றும் மழை நீடிக்கும்

லட்சத் தீவு அருகே உருவாகியுள்ள வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழத்தின் சில இடங்களில் புதன்கிழமையும் (அக்.1) மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. லட்சத் தீவு அருகே சில நாள்களுக்கு முன்பு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி உருவானது. தற்போது அது நகர்ந்து சென்று கிழக்கு மத்திய அரபிக்கடல் அருகே நிலை கொண்டுள்ளது. இதன் காரணமாக தமிழகத்திலும் புதுச்சேரியிலும் மழை நீடிக்கும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் சில இடங்களில் மழை பெய்யலாம் என்று முன்னறிவிப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மதுரை வேளாண் அறிவியல் மையத்தில் செப்.,30ல் மூலிகை சாகுபடி பயிற்சி

மதுரை வேளாண்மைக் கல்லூரியில் உள்ள வேளாண். அறிவியல் மையத்தில், மூலிகைச் சாகுபடி பயிற்சி செப்டம்பர் 30ஆம் தேதி நடைபெறவுள்ளது என, வேளாண். அறிவியல் மையத் தலைவர் தி. ரங்கராஜ் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் கூறியது: பண்டை கால சித்தர்களின் ஓலைச்சுவடிகள் கூற்றின்படி, இயற்கையில் கிடைக்கும் மூலிகைகளையே பிணி தீர்க்கும் அருமருந்தாகப் பயன்படுத்தி வந்துள்ளனர். நாகரீகம் வளர வளர மருத்துவ முறைகளில் மாற்றம் ஏற்பட்டதால், செயற்கை மருத்துவ முறைகள் நன்கு வளர்ந்தன. இருப்பினும், சமீப காலமாக உலகளவில் இயற்கை மருத்துவ முறைகள் நல்ல வரவேற்பைப் பெற்று வருகின்றன. மூலிகைப் பயிர்கள், சளி, இருமல், தலைவலி, மஞ்சள் காமாலை, ரத்தக் கொதிப்பு, மன அழுத்தம்,

தோல் வியாதி போன்ற நோய்களைக் குணப்படுத்தவும், இயற்கை மலமிளக்கியாகவும், நரம்புத் தளர்ச்சியை நீக்கவும், இயற்கைச் சாயம் தயாரிக்கவும் அதிகம் பயன்படுகிறது. இயற்கை மருத்துவத் தேவைக்குப் பயன்படும் மூலிகைப் பயிர்களான தூதுவளை, ஓமவல்லி, மஞ்சள் காசலை, வெள்ளை காசலை, தவசிக் கீரை, நித்திய கல்யாணி, திப்பிலி, துளசி, திருநீற்றுப் பச்சிலை, சோற்றுக்கற்றாழை, ஆடாதொடை, பிரம்மி, சர்க்கரை துளசி, அவுரி போன்றவற்றை சாகுபடி செய்யலாம். மேலும், தேவைக்கேற்ப வீட்டுத் தோட்டத்திலும் நட்டு பராமரித்து பயன்படுத்தலாம். மூலிகைப் பயிர்கள் சாகுபடி தொழில்நுட்பம் பற்றிய இலவசப் பயிற்சி, மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வேளாண்மை அறிவியல் மையத்தில் இம்மாதம் 30ஆம் தேதி நடைபெற உள்ளது. பயிற்சி பெற விருப்பம் உள்ளவர்கள், கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளலாம். பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண்மை அறிவியல் நிலையம், வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை- 625 104. மேலும், 0452-2422955, 94437-78075 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம் என, அவர் தெரிவித்துள்ளார்.

## ஆயுத பூஜை: பூக்களின் விலை கடும் உயர்வு

பரமத்தி வேலூர் பூக்கள் ஏலச் சந்தையில் ஆயுத பூஜை, சரஸ்வதி பூஜையை முன்னிட்டு பூக்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். பரமத்தி வேலூரில் கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் குண்டு மல்லி கிலோ ரூ.400-க்கும், சம்மங்கி கிலோ ரூ.150-க்கும், அரளி கிலோ ரூ.100-க்கும், கோழிக் கொண்டை இரண்டு கட்டு ரூ.60-க்கும், செவ்வந்திப்பூ கிலோ ரூ.120-க்கும், துளசி கட்டு ஒன்று ரூ.10-க்கும் ஏலம் போனது. செவ்வாய் கிழமை நடைபெற்ற ஏலத்தில் குண்டு மல்லி கிலோ ரூ.700-க்கும், சம்மங்கி கிலோ

ரூ.300-க்கும், அரளி கிலோ ரூ.300-க்கும், கோழிக்கொண்டையின் வரத்து குறைந்திருந்ததால் கட்டு ஒன்று ரூ.100-க்கும், செவ்வந்திப்பூ கிலோ ரூ.250-க்கும், துளசி கட்டு ஒன்று ரூ.20-க்கும் ஏலம் போனது. தற்போது தொடர்ந்து மழை பெய்து வருவதால் பூக்களின் வரத்து குறைந்துள்ளது. மேலும் சரஸ்வதி பூஜை மற்றும் ஆயுதபூஜை பண்டிகையை முன்னிட்டு பூக்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**<u>நத்தம் அருகே வறட்சியிலும் பூத்துக் குலுங்கும் செண்டு மல்லி</u>**

நத்தம் பகுதியில் கடும் வறட்சியிலும் செண்டு மல்லிப் பூக்கள் பூத்துக் குலுங்கினாலும், விலை குறைவால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். நத்தம் சுற்று வட்டாரப் பகுதிகளான மங்களப்பட்டி, சிரங்காட்டுப்பட்டி, புண்ணபட்டி பிள்ளையார்நத்தம், மணக்காட்டூர் உள்ளிட்ட பல கிராமப் பகுதிகளில் தோட்டப் பயிர்களாவும், இறவை சாகுபடியாகவும், மானாவாரியாகவும், செண்ட் மல்லி என்னும் கேந்திப் பூவை விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர். தற்போது கடும் வறட்சி நிலவுகின்ற போதிலும், கண்களைக் கவரும் வகையில் செண்ட் மல்லிப் பூக்கள் பூத்துக் குலுங்குகின்றன. அதிக மகசூல் தந்துள்ள இந்தப் பூக்களை, விவசாயிகள் அறுவடை செய்து விற்பனை செய்து வருகின்றனர். ஆனால், ஒரு கிலோ ரூ. 10 முதல் 15 வரை மட்டுமே விலை போகிறது. இது, உற்பத்தி செலவைக் காட்டிலும் மிகவும் குறைவு என்பதால், விவசாயிகள் மிகவும் நஷ்டமடைந்து வருத்தத்தில் உள்ளனர். இது தவிர, புரட்டாசி மாதம் முழுவதும் கோயில் விழாக்கள் மட்டுமே உள்ளன. வேறெந்த திருமண விசேஷங்களும் இல்லாததால், பூ விலை குறைந்ததற்கு இதுவும் ஒரு காரணமாக உள்ளது என்று விவசாயிகள் தெரிவித்தனர். இருப்பினும், ஆயுத பூஜை, சரஸ்வதி பூஜை போன்ற விழாக்கள் வரவுள்ளதால், அந்த நேரங்களில் போதுமான விலை கிடைக்குமென்ற நம்பிக்கையில் விவசாயிகள் காத்திருக்கின்றனர். ஒரு

கிலோ குறைந்தது ரூ. 50-க்கு விற்றால்தான் கட்டுபடியாகும் என்றும் தெரிவித்தனர்.

**<u>தொடர் மழை: வைகையாற்றில் நீர் வரத்து அதிகரிப்பு</u>**

ஆண்டிபட்டி, செப். 30: தேனி மாவட்டத்தில் கடந்த சிலநாள்களாக தொடர்ந்து மழை பெய்து வருவதால் வைகை உள்ளிட்ட ஆறுகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தேனி மாவட்டத்தில் போதிய மழை இல்லாததால் ஆறுகளில் நீர்வரத்து இல்லாது, பெரும்பாலான கண்மாய் மற்றும் குட்டைகள் வறண்டு காணப்படுகின்றன. இந்நிலையில் கடந்த சிலநாள்களாக தேனி மாவட்டதில் பரவலாக மழை பெய்துள்ளது. குறிப்பாக செப்டம்பர் மாதத்தில் மாவட்டம் முழுவதும் சராசரியாக 79.78 சதவீதம் மழையும், அதேபோல் கடந்த வாரம் 46.31 சதவீதம் மழையும் பெய்துள்ளது. இதனால் பெரும்பாலான ஆறுகளில் நீர்வரத்து ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து இப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இனிவரும் காலங்களில் மழை பெய்தால் ஆறுகளில் நீர்வரத்து அதிகரித்து குளம், குட்டைகளில் நீர்மட்டம் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. செவ்வாய்கிழமை மழையளவு: (மி.மீ) வைகை அணை:1.40, மஞ்சளாறு அணை: 7, அரண்மனைபுதூர்:1.50, தேக்கடி:1.80, பெரியாறு: 6.60, கூடலூர்:1.60, உத்தமபாளையம்:1

**<u>விருதுநகர் பகுதியில் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி</u>**

விருதுநகர் பகுதியில் செவ்வாய்க்கிழமை காலை முதல் மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். விருதுநகர் பகுதியில் கடந்த சில நாள்களாக பகலில் கடும் வெயில் வாட்டி வதைத்தது. சில நாள்களாக மாலையில் சிறிது நேரம் சாரல் மழை பெய்தது. இந்த மழையை நம்பி பாவாலி, சீனியாபுரம், எல்கைப்பட்டி, வடமலைக்குறிச்சி, சிவஞானபுரம், ஆமத்தூர், வெள்ளூர், குமிழங்குளம், செங்குன்றாபுரம், எல்லிங்க

நாயக்கன்பட்டி, செங்கோட்டை, சின்னப்பநாயக்கன்பட்டி, மூளிப்பட்டி, புதுப்பட்டி, சங்கரலிங்காபுரம், எரிச்சநத்தம், செவலூர் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் மானாவாரி நிலங்களில் கம்பு, சோளம், மக்காச்சோளம், கேழ்வரகு, குதிரைவாலி, பருத்தி, பாசிப்பயறு, மொச்சை உள்ளிட்ட தானிய விதைகளை விதைத்தனர். தற்போது, முளைத்து பயிராகியுள்ளதால் களை எடுக்கும் பணியை விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர். அதோடு, பயிர்கள் நன்றாக வளர்வதற்கு மழையையும் விவசாயிகள் எதிர்பார்த்திருந்தனர். இந்நிலையில் செவ்வாய்க்கிழமை அதிகாலை முதல், விட்டு, விட்டு மழை பெய்தது. இதனால் மானாவாரி விளைநிலங்கள் அனைத்தும் குளிர்ந்துள்ளன. பயிர் செழித்து வளர்வதற்கான வாய்ப்புள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## <u>மேட்டூர் அணை நீர்மட்டம் 91.80 அடி</u>

மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 91.80 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 21,306 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 18,019 கனஅடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து விநாடிக்கு காவிரியில் 8,011 கனஅடி வீதமும், வெண்ணாற்றில் 3,000 கனஅடி வீதமும், கல்லணைக் கால்வாயில் 3,004 கனஅடி வீதமும், கொள்ளிடத்தில் 1,515 கனஅடி வீதமும் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

## <u>தரிசு நில சாகுபடி: தோட்டக்கலை துணை இயக்குநர் ஆய்வு</u>

தரிசு நிலங்களை சாகுபடிக்கு கொண்டு வரும் திட்டத்தின் கீழ், உளுந்தூர்பேட்டை வட்டாரத்தில் உள்ள தரிசு நிலங்களை தோட்டக்கலை துணை இயக்குநர் க.வீராசாமி ஆய்வு செய்தார். நடப்பு ஆண்டில் 1,217 ஏக்கர் பரப்பளவில் தரிசு நிலங்களில் கத்தரி, வெண்டை, மிளகாய், கொத்தமல்லி போன்ற குறைவான நீர்

தேவையுடைய, நாள்தோறும் வருமானம் தரக்கூடிய காய்கறிப் பயிர்கள் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக, உளுந்தூர்பேட்டை வட்டாரத்தில் தோட்டக்கலை பயிர்கள் பயிர் செய்யக் கூடிய பயனாளிகள் இனம் கண்டறியப்பட்டு மேற்கொண்டு நடைபெற வேண்டிய பணிகளுக்காக இந்த ஆய்வுகள் நடைபெற்றன. ஆய்வின் போது வேளாண் உதவி இயக்குநர் கருணாநிதி மற்றும் தோட்டக்கலை அலுவலர் அலெக்ஸாண்டர் உடனிருந்தனர்.

## பக்ரீத் பண்டிகை: செம்மறி ஆடுகள் விற்பனை அதிகரிப்பு

பக்ரீத் பண்டிகையையொட்டி திருநெல்வேலி மாவட்டத்தில் செம்மறி ஆடுகளின் விற்பனை இரட்டிப்பாகி உள்ளது. மேலப்பாளையம் கால்நடைச் சந்தைக்கு செவ்வாய்க்கிழமை ஒரே நாளில் 2 ஆயிரம் செம்மறி ஆடுகள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டன. இஸ்லாமியர் களின் முக்கிய பண்டிகைகளில் பக்ரீத் பெருநாளும் ஒன்றாகும். இந்த நாளில் இஸ்லாமியர்கள் பிராணிகளை (ஆடு, மாடு, ஒட்டகம்) குர்பானி கொடுத்து இறைச்சியை ஏழைகளுக்கு வழங்குவது வழக்கம். ஆடுகளைப் பொருத்தமட்டில் செம்மறி ஆடுகளே குர்பானி கொடுக்கப்படுகிறது. இவற்றின் தோல்கள் மொத்தமாக சேகரிக்கப்பட்டு பல்வேறு நலத்திட்ட உதவிகளுக்குப் பயன்படுத்தப்படும். தமிழகத்தில் பக்ரீத் பண்டிகை அக்டோபர் 6ஆம் தேதி கொண்டாடப்பட உள்ளதாக அரசு ஹாஜி அறிவித்துள்ளார். இதையடுத்து, திருநெல்வேலி மாநகராட்சிக்குள்பட்ட மேலப்பாளையம் கால்நடைச் சந்தையில் செம்மறி ஆடுகள் விற்பனை அதிகரித்துள்ளது. வாரந்தோறும் நடைபெறும் இந்தச் சந்தைக்கு 1000 முதல் 1500 செம்மறி ஆடுகள் விற்பனைக்காகக் கொண்டுவரப்படும். ஆனால், செவ்வாய்க்கிழமை இந்தச் சந்தைக்கு மொத்தம் 2,640 ஆடுகள் விற்பனைக்காக வந்தன. அவற்றில் 2,100-க்கும் மேற்பட்டவை செம்மறி ஆடுகள். இவை ரூ.4 ஆயிரம் முதல் அதிகபட்சமாக ரூ.20 ஆயிரம் வரை விற்பனையாகின. வளர்ப்பில் இருவகை: இதுகுறித்து மேலப்பாளையத் தைச் சேர்ந்த ஆட்டு வியாபாரி செல்லையா கூறியதாவது:

மேலப்பாளையம் கால்நடைச் சந்தையில் ஆண்டுதோறும் பக்ரீத் பெருநாள் வாரங்களில் செம்மறி ஆடுகளின் விற்பனை கணிசமாக அதிகரிக்கும். மதுரை, திண்டுக்கல், ராமநாதபுரம், கோவில்பட்டி, கயத்தாறு, ஆலங்குளம், தென்காசி பகுதிகளில் இருந்து செம்மறி ஆடுகள் விற்பனைக்காக கொண்டுவரப்படுகின்றன. செம்மறி ஆடுகளின் வளர்ப்பில் இருவகைகள் உள்ளன. சிலர் பக்ரீத்தை கணக்கில்கொண்டு ஒன்று முதல் 3 செம்மறி கிடாய்களை வீடுகளில் வளர்த்து விற்பனைக்குக் கொண்டுவருவார்கள். இவை புற்கள், புண்ணாக்கு அதிகம் கொடுத்து வளர்ப்பதால் எடையும், இறைச்சியும் அதிகமாக இருக்கும். இவற்றில் கொம்புகள் கொஞ்சம் சிறியதாக இருக்கும். மந்தைகளாக வளர்க்கப்படும் செம்மறி ஆடுகள் மேய்ச்சலின் மூலம் உணவைத் தேடிக் கொள்கின்றன. இந்தக் கிடாய்கள் பெரும்பாலும் கொம்புகள் சுருள் விழுந்ததாகவும், இறைச்சி கொஞ்சம் குறைவானதாகவும் காணப்படும். சில வியாபாரிகள் விற்பனைக்கு கொண்டுவரும் சிறிது நேரத்துக்கு முன்பு ஆடுகளுக்கு வலுகட்டாயமாக தண்ணீரை அடைத்து எடையை அதிகரிப்பார்கள். இதை மிகவும் கவனத்தோடு பார்த்து வாங்க வேண்டும். இந்த ஆண்டிலும் செம்மறி ஆடுகளின் விற்பனை நன்றாக உள்ளது. மேலப்பாளையம் மட்டுமன்றி காயல்பட்டினம், ஏர்வாடி பகுதி மக்களும் மொத்தமாக சுமை ஆட்டோக்களில் இங்கு வந்து செம்மறி கிடாய்களை வாங்கிச் செல்கிறார்கள் என்றார் அவர். புதிய திட்டங்கள் தேவை: செம்மறி ஆட்டுமந்தை வைத்துள்ள கயத்தாறு ராமகிருஷ்ணன் கூறியதாவது: கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக சுமார் 100 ஆடுகள் கொண்ட செம்மறி ஆட்டுமந்தை நடத்தி வருகிறேன். மேய்ச்சல் நிலப்பரப்பு, விவசாயம் போன்றவை குறைந்து வருவதால் செம்மறி ஆடுகள்பெருக்கும் குறைந்துகொண்டுதான் வருகிறது. முன்பெல்லாம் ஒரு கிராமத்துக்குச் சென்றால் குறைந்தது 40 வயல்களிலாவது பட்டி அமைத்து சுமார் ஒன்றரை மாதங்கள் தங்குவோம். ஆனால், இப்போது அந்த எண்ணிக்கை ஒற்றை இலக்கத்துக்கு மாறிவிட்டது. நாங்களாகச் சென்று

விவசாயிகளிடம் பட்டி அமைக்கக் கேட்டாலும், முன்புபோல பணம் ஏதும் கொடுக்காமல் இலவசமாக பட்டி அமைக்கக் கூறுகிறார்கள். ரசாயன உரங்களை மட்டுமே நம்புவதால் செம்மறி ஆட்டு மந்தைத் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இதுதவிர சாலைவிபத்துகளில் இறக்கும் ஆடுகளின் எண்ணிக்கை கடந்த சில ஆண்டுகளில் மிகவும் அதிகரித்துள்ளது. இதற்கு முறையான இழப்பீடு கிடைக்காமல் தவிக்கிறோம். ஆகவே, செம்மறி ஆடுகள் பெருக்கத்தை அதிகரிக்க தமிழக அரசு புதிய திட்டங்களை வகுத்தால் பக்ரீத் பெருநாளுக்கு சற்று குறைந்த விலையில் பொதுமக்கள் ஆடுகளைப் பெற வழிபிறக்கும். அதனுடன் எங்களைப் போன்ற கால்நடை வளர்ப்போரும் பயன்பெறுவோம் என்றார் அவர்.

**அடிப்படை வசதிகள் தேவை!** மேலப்பாளையம் கால்நடைச் சந்தை மாநகராட்சி வசம் வந்துள்ள நிலையில், செவ்வாய்க்கிழமை ஒரே நாளில் 2,640 ஆடுகள், 1,428 மாடுகளுக்கு விற்பனை அனுமதிச் சீட்டு வழங்கியது உள்பட மொத்தம் ரூ.1 லட்சத்து 26 ஆயிரத்து 215 கட்டணமாகக் கிடைத்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால், சந்தையின் உள்பகுதியில் பெரும் சுகாதாரக் கேடு நிலவுகிறது. பருவமழை தொடங்கும் முன் இந்தச் சந்தையில் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். இல்லையெனில் இங்கு விற்பனைக்காக வரும் கால்நடைகளும், வியாபாரிகளும் நோயில் சிக்கும் அபாயம் உள்ளது என்றனர் வியாபாரிகள்.

## இன்றைய வேளாண் செய்திகள்

**<u>மருத்துவ குணமுள்ள சிறுமலை வாழைப் பழம் ரூ.15 க்கு விற்பனை</u>**

திண்டுக்கல் : மருத்துவ குணமுள்ள சிறுமலை வாழைப்பழம் ஒன்று ரூ.15 க்கு விற்பதால், பொதுமக்கள் வாங்க தயங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் இயற்கை எழில் கொஞ்சும் இடமாக சிறுமலை திகழ்கிறது. இங்கு பலா, எலுமிச்சை, மிளகு, காபி பயிர்கள் அதிகளவு விளைவிக்கப்படுகின்றன. இதில், முக்கியமானது சிறுமலை வாழையாகும். நோய்களை குணமாக்கும் மருத்துவ சக்தி இந்த பழத்தில் இருப்பதாக கருதப்படுகிறது.பழநி பஞ்சாமிர்தம் செய்வதற்கு முக்கியமான பொருளாக சிறுமலை வாழைப்பழம் சேர்க்கப்படுகிறது. அதிக இனிப்பு தன்மை கொண்டது. நீர் சத்து குறைவானது என்பதால் ஒரு மாதம் வரை அழுகாமல் இருக்கும்.திண்டுக்கல் மாவட்டத்திற்கு வரும் சுற்றுலா பயணிகள் சிறுமலை வாழைப்பழத்தை விரும்பி வாங்கிச் செல்வர். தென் மாவட்டங்களில் இருந்து ரயில் மற்றும் பஸ் மூலம் சென்னை செல்பவர்கள், திண்டுக்கல்லில் சிறுமலை வாழைப் பழத்தை வாங்கி செல்வதில் அதிக ஆர்வம் காட்டுவர். பாதிப்பு: கடந்த இரண்டு ஆண்டுகளாக மழை இல்லாததால் சிறுமலை வாழை விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. பல விவசாயிகளின் தோட்டங்களில் சாகுபடி செய்த வாழை ஒட்டுமொத்தமாக பட்டு போனது. மேலும் சிறுமலை வாழையை குறி வைத்து தாக்கும் வாடல் நோயாலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பழம் ரூ.15: திண்டுக்கல்லில் சிறுமலை பழம் ஒன்றின் விலை ரூ.15 க்கு விற்கப்படுகிறது. விலை அதிகமாக இருப்பதால்,

பொதுமக்களும், சுற்றுலா பயணிகள் வாங்க தயக்கம் காட்டுகின்றனர். இதனால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டிருப்பதோடு, தங்களுக்கு பிடித்தமான பழத்தை, விலை அதிகரிப்பால் உண்ண முடியாத நிலை மாவட்ட மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

**<u>கறுப்பு திராட்சை விலை குறைவு வாங்கிச் சுவைக்கும் பொதுமக்கள்</u>**

தர்மபுரி: கறுப்பு திராட்சை விலை குறைந்துள்ளதால், பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர். தமிழகத்தில், சில தினங்களாக, பகல் நேரங்களில் வெயில் வாட்டி வருகிறது. வெயிலுக்கு இதமளிக்கும் வகையில் உள்ள பழங்களை வாங்கி ருசித்து, உடல்சூட்டை தணிக்க, பொதுமக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். குறிப்பாக, வெயிலுக்கு இதம் அளிப்பதோடு மட்டுமின்றி, வைட்டமின்கள் நிறைந்த, திராட்சை பழங்களை சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை, விரும்பி சுவைப்பது உண்டு. இதனால், பழக்கடைகளில் திராட்சை பழங்களுக்கு, எப்போதும் வரவேற்பு உள்ளது. மேலும், திராட்சை பழத்தின் விலையும் கட்டுபடியானதாக உள்ளதால், திராட்சை பழத்தை, அனைத்து தரப்பு மக்களும் வாங்கி, உண்டு வருகின்றனர். தர்மபுரி மாவட்டத்தில், திராட்சை சாகுபடி ஒரு சில ஏக்கரில் மட்டும் உள்ளது. இதனால், தர்மபுரி மாவட்டத்துக்கு தேனி, கம்பம், போடி, மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் இருந்து, அதிகளவில் திராட்சை விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. தற்போது, தேனி, திண்டுக்கல் உள்ளிட்ட பகுதிகளில் திராட்சை சாகுபடி அதிகரித்துள்ளது. இதனால், ஒரு கிலோ கறுப்பு திராட்சை பழம், 25 முதல், 30 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. கோடை காலத்தில் திராட்சை பழ விலை குறைந்துள்ளதால், மக்கள் ஆர்வத்துடன், திராட்சை பழங்களை வாங்கிச் செல்கின்றனர். தர்மபுரியை சேர்ந்த பழவியாபாரி மணிமாறன் கூறியதாவது: தர்மபுரி மாவட்ட விவசாயிகள், கறுப்பு திராட்சையை தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில்

இருந்து வாங்கி வந்து, விற்பனை செய்து வருகின்றனர். தற்போது, கறுப்பு திரட்சை பழ விளைச்சல் தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் அதிகரித்துள்ளது. கடந்த சில மாதங்களுக்கு முன், 40 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்ட, ஒரு கிலோ கறுப்பு திராட்சை, 25 முதல், 30 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. பொதுமக்கள், அதிகளவில் திராட்சை பழங்களை வாங்கிச் செல்கின்றனர்.இவ்வாறு கூறினார்.

**மக்காச்சோள விவசாயத்தில் மாநில சாதனை**



வறட்சியிலும் குறைந்த தண்ணீரை பயன்படுத்தி, மக்காச்சோளம் சாகுபடியில் ஒரு எக்டேருக்கு 12 டன்கள் (120 மூட்டைகள்) வரை மகசூல் எடுத்து சாதனை படைத்துள்ளார் பழநி பாலசமுத்திரத்தை சேர்ந்த விவசாயி எஸ்.ராமசாமி. மாநிலஅளவில் முதலிடம் பிடித்த இவருக்கு வேளாண்மைத்துறை மூலம் ரூ.25 ஆயிரம் பரிசு வழங்கப்பட்டுள்ளது. தனது சாதனை குறித்து ராமசாமி கூறியதாவது:

ஒரு எக்டேரில் சாகுபடி செய்வதற்கு உரம், வேலையாட்கள் கூலி, நீர் பாசனத்திற்காக ரூ.25 ஆயிரம் வரை செலவு செய்தேன். பொதுவாக ஒரு எக்டேருக்கு 8 டன்கள் தான் மகசூல் கிடைக்கும். வேளாண்மைத்துறை அதிகாரிகளின் ஆலோசனைப்படி, நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தியதால், 12 டன்கள் வரை கிடைத்துள்ளது. தற்போது ஒரு மூடை ரூ.1,350 விற்பனையாகிறது. இதன் மூலம் ரூ.1.35 லட்சம் லாபம் கிடைத்துள்ளது. பயிரிடும் முறை: மக்காச்சோளத்தை ஐப்பசியில் பயிரிட்டேன். விதைப்பதற்கு முன்பாக நிலத்தில் கட்டிகள் இல்லாதவாறு

தொடர்ந்து பலமுறை உழவு செய்ய வேண்டும். மண் பொலிவாக இருந்தால் தான் வேர் வெகுவாக கீழே செல்லும். மண் பரிசோதனைப்படி உரமிட்டால், உரம் வீணாவதை தவிர்க்கலாம். ஒரு எக்டேருக்கு அடியுரமாக 135 கிலோ டி.ஏ.பி.,- 30 கிலோ யூரியா, 85 கிலோ பொட்டாஷ் இட வேண்டும். தொடர்ந்து 12.5 கிலோ நுண்ணூட்ட சத்துகளை 20 கிலோ மண் கலந்து இட வேண்டும். நான், 52/11 என்ற வீரிய ரக விதைகளை பயன்படுத்தினேன். ஒரு எக்டேருக்கு 12.5 கிலோ வரை விதைவேண்டும். அஸ்சோஸ்பைரில்லம் மூலம் விதை நேர்த்தி செய்தால், வேருக்கு தேவையான தழைச்சத்தை பெற்று தரும். ஒரு கிலோ 10 கிராம் டிவிரிடி அஸ்சோடோமோனசில் பூஞ்சன விதை நேர்த்தி செய்தால், நோய் தாக்குதல் ஏற்படாது. 60 X 20 செ.மீ., இடைவெளியில் விதைகள் நட வேண்டும். களைகொல்லி பயன்படுத்தினேன். களையெடுக்கும்போது, மேலுரமாக 150 கிலோ யூரியா பயன்படுத்த வேண்டும். பால் பிடிக்கும் தருணத்தில் 75 கிலோ யூரியா பயன்படுத்த வேண்டும். நான், கிணற்று பாசனம் மூலம் நீர் பாய்ச்சினேன். சொட்டுநீர் பாசனம் பயன்படுத்தினால், நீரை மிச்சப்படுத்தலாம். 15 நாட்கள் இடைவெளியில் நீர் பாய்ச்ச வேண்டும், என்றார். **இவருடன் பேச: 9362686204 இ.ஜெகநாதன்,** திண்டுக்கல்.

## சின்ன சின்ன செய்திகள்



திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பங்கள் : தரமான விதை, விதை அளவு 3 கிலோ / ஏக்கர், குறைந்த பரப்பளவு நாற்றங்கால் (1சென்ட் / 1 ஏக்கர்), பாய் நாற்றங்கால் குறைந்த வயதுடைய நாற்று (14 நாட்கள்), நடவு வயலுக்கு இயற்கை மற்றும் பசுந்தாள் உரமிடல், நடவு வயலை சமப்படுத்துதல், சதுர நடவு முறையில் நடவு, ஒற்றை நாத்து நடவு, கோனோ கருவியைக் கொண்டு களை எடுத்தல், நீர் மறைய நீர் கட்டுதல், பச்சை நிற வண்ண அட்டையை கொண்டு உரமிடுதல்.

**ஐஸ்வர்யா - ஆராய்ச்சி நெல் :** ஸ்ரீகிருஷ்ணா சீட்ஸ் வெளியிட்டுள்ள இந்த ரகம் சன்ன ரகத்தைச் சார்ந்தது. மகசூல் திறன் 35 -40 குவிண்டால் / ஏக்கர் வயது 120 -125 நாட்கள். எல்லா பருவத்திற்கும் எல்லா பகுதிகளுக்கும் பயிரிட ஏற்றது. புகையான் மற்றும் கொலைநோய் தாக்குதலை தாங்கி வளரும் தன்மை கொண்டது. விதை விதைத்த 15 லிருந்து 25 நாட்களுக்குள் நாற்றை விடவும். காய்ச்சல், பாய்ச்சல் முறையில் தண்ணீர் கட்டவும். அனைத்து கதிர்களிலும் 300க்கு மேற்பட்ட நெல்மணிகளைக் கொண்டு அதிக மகசூல் தரவல்லது. சன்ன ரகமாக இருப்பதால் சந்தையில் வியாபாரிகளால் விரும்பி வாங்கப்படுகிறது. மேலும் விபரங்களுக்கு SRI KRISHNA SEEDS, WCR Plot No. 13A, SIDCO 1 INDUSTRIAL Estate, Thuvakudy, Trichy15. ÷£õß: 75988

77573.(e)srikrishnaseeds@gmail.com.

**மானாவாரிக்கேற்ற பயிர்களில் புதிய உயர் விளைச்சல் இரகங்கள் அண்ணா (பி.எம்.கே.4) நெல் :** நடுத்தர உயரம் மற்றும் சாயாத தன்மை, 100-105 நாட்கள் வயதுடையது, வறட்சியைத் தாங்கும் திறன், மானாவாரியில் சராசரியாக எக்டருக்கு 3.7 டன் மகசூல் தரவல்லது. **கோ.(எச்.எம்)6 வீரிய ஒட்டு மக்காச்சோளம் :** அதிக மகசூல் தரக்கூடிய ஒற்றைக் கலப்பு இரகம், 110 நாட்கள் வயதுடையது. மானாவாரியில் புரட்டாசிப் பட்டத்திற்கு ஏற்றது. அடிச்சாம்பல் நோய்க்கு எதிர்ப்புத்திறன், தண்டு துளைப்பான் பூச்சிக்கு மிதமான எதிர்ப்புத்திறன், மானாவாரியில் சராசரியாக எக்டருக்கு 5000 கிலோ மகசூல் தரவல்லது. **கோ(சி.யு)9 கம்பு :** நீளமான கதிர்கள் (45 செமீ) அதிக தூர் எண்ணிக்கை (4-6), 80-85 நாட்கள் வயதுடையது. அடிச்சாம்பல் நோய்க்கு எதிர்ப்புத்திறன் கொண்டது. மானாவாரியில் சராசரியாக எக்டருக்கு 2350 கிலோ மகசூல் தரக்கூடியது. (தகவல் : வேளாண்மை அறிவியல் நிலையம், அருப்புக்கோட்டை).

**உப்புநீரை பாசனத்திற்கு பயன்படுத்த :** களரிப்பாக்கம் வேளாண் அறிவியல் மையம் உதவிப் பேராசிரியர் வேல்முருகன் தெரிவிக்கும் நுட்பங்கள். குறிப்பாக ஆழ்துளைக் கிணற்றிலிருந்து வரும் உப்புநீரை பயன்படுத்துவது எப்படி என்று கேள்வி. ஆழ்துளைக் கிணற்றுக்கு அருகில் மழைநீரைச் சேகரிக்க பண்ணைக்குட்டை அல்லது மழைநீர் சேகரிப்பு, தொட்டிகள் அமைக்கலாம் என்கிறார் பேராசிரியர் வேல்முருகன். அதாவது ஆழ்துளைக் கிணற்றுக்கு அருகில் 3 அடி நீளம் 2 1/2 அடி அகலம், 4 அடி ஆழத்துக்கு குழி எடுத்து அதில் 3 அடி உயரத்துக்கு ஜல்லி, ஜல்லிகற்களை நிரப்பி அதற்கு மேல் ஒரு அடி உயரத்துக்கு மணல் நிரப்பினார். மழைநீர் சேகரிப்பு தொட்டி தயாராகி விடும். இதன் மூலம் ஆழ்துளைக் கிணற்றின் நீர்மட்டம் உயரும். காலப்போக்கில் உப்புத்தன்மையும் குறைய வாய்ப்புகள் உள்ளன.

தவிர தக்கைப்பூண்டு போன்ற பசுந்தாள் பயிர்களை சாகுபடி செய்வதால் அது மண்ணில் உள்ள உப்புத்தன்மைக் குறைக்கிறது. நன்றாக விளைச்சல் கொடுக்கக்கூடிய திருச்சி1, திருச்சி 3 ஆகிய நெல் ரகங்களை சாகுபடி செய்யலாம். கூடவே இயற்கை உரங்களை நிறைய பயன்படுத்த வேண்டும். கேழ்வரகு, வரகு போன்ற உப்புத்தன்மையைத் தாங்கி வளரும். சிறு தானியங்களையும் சாகுபடி செய்யலாம். பழமரங்களைப் பொறுத்தவரையில் கொய்யா, புளி, நாவல், நெல்லி போன்றவற்றை இந்த மாதிரியான நிலத்திற்கு ஏற்றதாக இருக்கும். (தொடர்புக்கு: தொலைபேசி - 044 - 274 52371). - டாக்டர் **கு.சௌந்தரபாண்டியன்.**

## <u>தோட்டக்கலை பயிர்களின் சாகுபடி செலவை அரசே ஏற்கும் திட்டம்</u>



உடுமலையில் வாழை, மா, கொய்யா, எலுமிச்சை, ஜாதிக்காய் சாகுபடியை ஊக்குவிக்கும் பொருட்டு சாகுபடி செய்ய விருப்பம் உடைய விவசாயிகள் முன்பதிவு துவங்கி உள்ளது என டாக்டர் பா.இளங்கோவன் தோட்டக்கலை உதவி இயக்குநர் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகை யில், ஒரு ஏக்கர் பரப்பில் 160 மாங்கன்றுகள் நடவும் உரிய பராமரிப்பும் மேற்கொள்ள அடர் நடவு முறைக்கு எக்டருக்கு ரூ.9800/- மான்யம், திசுவாழை ஒரு எக்டருக்கு ரூ.30750/- மான்யம், எலுமிச்சைக்கு ரூ.12000/- மான்யம், வீரியவகை காய்கறி சாகுபடிக்கு எக்டருக்கு ரூ.20000/- மான்யம், கிழங்கு வகை மலர்கள் சாகுபடிக்கு ரூ.37500/- எக்டருக்கு மான்யம் தரப்படுகிறது. மிளகாய் மஞ்சள் மற்றும் பெரிய

வெங்காயம் சாகுபடியை ஊக்குவித்து எக்டருக்கு ரூ.12000/- மான்யம், ஜாதிக்காய் சாகுபடிக்கு ரூ.20000/-மான்யம் உள்ளது. பாலிதீன் மல்ச்சிங் எனும் நிலப்போர்வை அமைத்திட ஒரு யூனிட்க்கு ரூ.16000/- மான்யம் உண்டு. மா சாதாரண முறையில் ஏக்கருக்கு 40 கன்றுகள் நடலாம். கொய்யா அடர்நடவு சாகுபடிக்கு எக்டருக்கு ரூ.17600/- மான்யம் உண்டு. கடந்த ஆண்டு நட கொக்கொ பெற்ற விவசாயிகள் நடப்பு ஆண்டு பராமரித்திட எக்டருக்கு ரூ.4000/- மான்யம், மா இரண்டாம் ஆண்டு பராமரிப்பு அடர்நடவு முறைக்கு ரூ.8000/- மான்யமும், சாதாரண முறை மா நட எக்டருக்கு ரூ.3300/- மான்யம் உள்ளது. எலுமிச்சை 2ம் ஆண்டு நடவுக்கு ரூ.5000/- மான்யம், பாபிஹவுஸ் திட்டம் ரூ.4.675/- லட்சம் 1000 சதுர மீட்டர் பரப்புக்கு தரப்படுகிறது. இதற்கு ரூ.10 லட்சம் முதலீடு ஆகும். உதிரி மலர்கள் மல்லிகை, கனகாம்பரம், செண்டுமல்லி சாகுபடிக்கு எக்டருக்கு ரூ.10000/- மான்யம் ஆகும். நிழல் வலையில் டியுபுளர் அமைப்பு சாகுபடிக்கு ரூ.355/- சதுர மீட்டருக்கு வழங்கப்படும் மான்யம் பெற சுமார் ரூ.780/- சதுர அடிக்கு செலவு ஆகும். மண்புழு உரம் தயாரிப்பு பெரிய அளவில் செய்திட 1 லட்சம் செலவாகும். அதற்கு ரூ.30000/- மான்யம் உள்ளது. நவீன சாகுபடிக்கு டிராக்டர், பவர்டில்லர், விளக்குப்பொறி, பவர் ஸ்ப்ரேயர் பெற மான்யம் உள்ளது. சிறு விவசாயி, பெண் விவசாயி, ஆதி விவசாயிக்கு சிறப்பு சலுகைகள் உள்ளது. தேவைக்கு இன்றே பதிவு செய்ய சிட்டா, அடங்கல், ரேசன் கார்டு ஜெராக்ஸ், 3 போட்டோ, மண் மாதிரி நிர்மாதிரி முடிவு இணைத்து விண்ணப்பிக்கலாம். மேலும் விபரம்பெற 98420 07125 எண் உள்ளதே.

**சொட்டு நீர் பாசன வயல்களில் துணை இயக்குநர் திடீர் ஆய்வு**

விழுப்புரம்: விழுப்புரம் மாவட்டத்தில் சொட்டு நீர் பாசன வயல்களில் தோடக்கலை துணை இயக்குநர் வீரசாமி திடீர் ஆய்வு செய்தார். தியாகதுருகம், உளுந்தூர்பேட்டை, திருநாவலூர் ஒன்றியங்களில் கரும்பு பயிருக்கு அமைக்கபட்டுள்ள சொட்டு நீர் பாசன அமைப்புகளை,

மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர் (பொறுப்பு) வீராசாமி திடீரென ஆய்வு செய்தார். தியாகதுருகம் ஒன்றிய வேளாண்மை உதவி இயக்குநர் ராமச்சந்திரன், தோட்டக்கலை அலுவலர் வாமலை, உளுந்தூர்பேட்டை வட்டாரத்திற்கான ஆய்வில் தோட்டக்கலை அலுவலர் அலெக்சாண்டர் மற்றும் ஜெயின் ஆகியோர் பங்கேற்றனர். சொட்டு நீர் பாசன அமைப்புகள் பற்றி விவசாயிகளுக்கு ஆலோசனை களை வேளாண் அதிகாரிகள் வழங்கினர். சொட்டு நீர் பாசன கருவிகள் செயல் படும் வீதம், அமைப்புகளின் பயன்பாடு, நீர் சிக்கனம், கடைபிடிக்கப்படும் உத்திகள் நடைமுறைகள் பற்றியும், சம்பந்தபட்ட நிறுவனத்தின் சர்வீஸ் முறை களையும் விவசாயிகள் குறித்தும் கேட்டறிந்தனர். இந்த வயலாய்விற்கான முன்னேற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் செந்தில், பிரபு ஆகியோர் செய்தனர்.

## <u>நீர்வள ஆணைய அதிகாரிகள் மேட்டூர் அணையில் ஆய்வு</u>

மேட்டூர்: மத்திய நீர்வள ஆணைய அதிகாரிகள், மேட்டூர் அணையில் நேற்று காலை திடீர் ஆய்வு மேற்கொண்டனர். காவிரி நீர்பிடிப்பு பகுதியில், வடகிழக்கு பருவமழை தீவிரம் குறைந்ததால், நேற்று முன்தினம் வினாடிக்கு, 27,873 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து, நேற்று வினாடிக்கு, 18,787 கனஅடியாக சரிந்தது. அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு வினாடிக்கு, 18,000 கனஅடி, கால்வாய் பாசனத்துக்கு வினாடிக்கு, 600 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டது. நீர்வரத்து குறைந்ததால், நேற்று முன்தினம், 91.740 அடியாக இருந்த அணை நீர்மட்டம் நேற்று, 91.730 அடியாக குறைந்தது. இந்நிலையில், மத்திய நீர்வள ஆணைய செயலக உறுப்பினர் மகேந்திரன் தலைமையில், மூவர் குழு நேற்று காலை மேட்டூர் அணையில் ஆய்வு மேற்கொண்டனர். அணை இடதுகரை, வலதுரை மற்றும் நீர்பரப்பு பகுதியை விசைப்படகில் சென்று குழுவினர் ஆய்வு செய்தனர். ஆய்வின்போது, பொதுப்பணித் துறை மேட்டூர் கோட்ட செயற்பொறியாளர் கந்தசாமி, அணை உதவி

செயற்பொறியாளர் கோவலன் உடன் இருந்தனர். பின்பு மத்திய நீர்வள ஆணைய அதிகாரிகள் ஒகேனக்கல் மற்றும் பிலிகுண்டுலுவில் உள்ள மத்திய நீர்வள ஆணையத்தின் நீர் அளவீடு மையத்தை ஆய்வு செய்வதற்காக புறப்பட்டு சென்றனர்.

**<u>வாழைத்தார் விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி</u>**

ப.வேலூர்: ஆயுதபூஜையை முன்னிட்டு வரத்து அதிகரித்ததாலும், வியாபாரிகள் போட்டி போட்டி ஏலம் எடுத்ததாலும், வாழைத்தார் விலை கிடுகிடுவென உயர்ந்தது. பொத்தனூர், பாண்டமங்கலம், வெங்கரை, பிலிக்கல்பாளையம், ஜேடர்பாளையம், சோழசிராமணி, அணிச்சம் பாளையம், நன்செய் இடையாறு, பொய்யேரி, குப்புச்சிப்பாளையம், ஓலப்பாளையம், பாலப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில், 5,000க்கும் மேற்பட்ட ஏக்கரில் வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பூவன், ரஸ்தாளி, கற்பூரவள்ளி, பச்சநாடன், மொந்தன் போன்ற ரகங்கள் விளைவிக்கப்படுகிறது. அறுவடை செய்யும் வாழைத்தார்களை, ப.வேலூரில் உள்ள தினசரி மார்க்கெட்டுக்கு கொண்டு வந்து ஏலம் விடுகின்றனர். ஆயுதபூஜையை முன்னிட்டு, வழக்கத்தை காட்டிலும், அதிகமாக, 3,200 வாழைத்தார் ஏலத்துக்கு கொண்டுவரப்பட்டது. பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள் போட்டு போட்டு ஏலம் எடுத்ததால், வாழைத்தார் விலை உயர்ந்தது. கடந்த வாரம், 450க்கு விற்பனையான பூவன் வாழைத்தார், நேற்று நடந்த ஏலத்தில், 600 ரூபாய்க்கு ஏலம் போனது. 300க்கு ஏலம் போன ரஸ்தாளி, 400க்கும், 250க்கு விற்பனை செய்யப்பட்ட, கற்பூரவள்ளி, 450க்கும், 250க்கு விலை போன, பச்சநாடன், 350க்கும், ஏழு ரூபாய்க்கு விற்பனையான, மொந்தன் வாழைக்காய் ஒன்று, எட்டு ரூபாய்க்கும் ஏலம் போனது. இது குறித்து விவசாயிகள் கூறியதாவது: வாழைத்தார் சீஸன் நேரத்தில் விலை உயர்வதும் மற்ற காலங்களில் விலை குறைவதும் வாடிக்கை. ஆயுதபூஜையை முன்னிட்டு வழக்கத்தை காட்டிலும், 3,200

வாழைத்தார்கள் ஏலத்தில் குவிக்கப்பட்டது. அவற்றை வியாபாரிகள் போட்டி போட்டு ஏலம் எடுத்ததால், வாழைத்தார் விலை அதிகரித்துள்ளது. இது பயிரிட்ட விவசாயிகளை மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## <u>உரக்கடைகளில் ஆய்வு செய்ய சிறப்பு குழு விவசாயிகள் கூட்டத்தில் கலெக்டர் உறுதி</u>

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரியில் நடந்த, விவசாயிகள் கூட்டத்தில் பேசிய கலெக்டர் ராஜேஷ், உரக்கடைகளில் ஆய்வு செய்ய சிறப்பு குழு அமைக்கப்படும் என தெரிவித்தார். கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், கலெக்டர் ராஜேஷ் தலைமையில் நடந்தது. மாவட்ட வருவாய் அலுவலர் பாலசுப்பிரமணியன், வேளாண் இணை இயக்குனர் தமிழ்ச்செல்வன், தோட்டக்கலை துறை இணை இயக்குனர் கலைச்செல்வி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில், கடந்த மாதம் பெறப்பட்ட, 130 மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து விவசாயிகளுடன் விவாதிக்கப்பட்டது. அப்போது விவசாயிகள் தரப்பில் பல்வேறு புகார்கள் தெரிவிக்கப்பட்டன. அதில், ஓசூர் பகுதிகளில் உள்ள உரக்கடைகளில் அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டும். நெடுங்கல்-பாலாறு இணைப்பு திட்டத்தை, ஏற்கனவே அளவீடு செய்த வழியில் அமைக்க வேண்டும். ஏனெனில், புதிதாக பாதை மாற்றியதில் முறைகேடு நடந்துள்ளது. காட்டு யானைகளால் ஏற்பட்ட பயிர் சேதத்திற்கு வழங்கப்பட்ட 130 மனுக்கள் மீது, இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடந்து வரும் மணல் கொள்ளையை தடுக்க வேண்டும். மாவட்டத்தில் போதிய மழை இல்லாத காரணத்தால், மானவாரி பயிர்கள் முற்றிலும் அழிந்து விட்டது. எனவே, போர்க்கால அடிப்படையில், மாவட்ட நிர்வாகம், விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாய கிணறுகளுக்கு சோலார் மின் இணைப்பு வழங்கிட வேண்டும்

என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் மற்றும் புகார்களை விவசாயிகள் முன்வைத்தனர். கலெக்டர் ராஜேஷ் பேசியதாவது:
கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து உரக்கடைகளிலும் ஆய்வு செய்ய சிறப்பு குழு அமைக்கப்படும். மணல் மற்றும் கனிமவள கொள்ளை தடுக்க 11 இடங்களில் சிறப்பு சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு அதிகாரிகள் இரவு பகலாக கண்காணித்து வருகின்றனர். மணல் திருட்டில் ஈடுபடுவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். நெடுங்கல்-பாலாறு இணைப்பு திட்டத்தில் எனது பெயரை பயன் படுத்தினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இந்த திட்டம் மத்திய நீர்வள ஆணையத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவர்கள் தான் வழித்தடம் குறித்து முடிவு செய்ய வேண்டும். விவசாயிகள், பொதுமக்கள் பாதிக்கப்படாத வகையில் நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்படும். இவ்வாறு அவர் பேசினார். விவசாயிகள் சங்க நிர்வாகிகள் சென்னையநாயுடு, ராமகவுண்டர், வேலு, தாசப்பா, சாக்கப்பன், கிருஷ்ணன் உள்பட, ஏராளமான விவசாயிகள் மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் பங்கேற்றனர்.

## <u>சோலார் திட்டத்துக்கு மானியம்: விவசாயிகளுக்கு அழைப்பு</u>

கிருஷ்ணகிரி; "கிருஷ்ணகிரி மாவட்டத்தில், வேளாண்மை பொறியியல் துறை சார்பில், நீர் மூழ்கி பம்புகளில், சோலார் திட்டத்தை செயல்படுத்த மானியம் வழங்கப்படுவதால், தகுதியான விவசாயிகள் விண்ணப் பிக்கலாம், என, அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதுகுறித்து, வேளாண்மை பொறியியல்துறை அதிகாரிகள் கூறியதாவது: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 2013-14ம் நிதியாண்டில், வேளாண்மை பொறியியல் துறை சார்பில், ஆறு "இன்ச்' ஆழ்துளை கிணற்றில் இருந்து, ஐந்து எச்.பி., திறன் கொண்ட நீர் மூழ்கி பம்புகள் அமைக்க, சோலார் பம்பு அமைக்கும் திட்டத்துக்கான அரசாணை பெறப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தில், பம்பு செயல்பாட்டினை

கட்டுப்படுத்தும் கருவி, நீர் மூழ்கி பம்பு செட் ஆகிய உபகரணங்கள், 80 சதவீத மானிய விலையில், விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு, அவர்களது நிலத்தில் பொருத்தி கொடுக்கப்படும். இதன் மொத்த மதிப்பு, நான்கு லட்சத்து, 40 ஆயிரம் ரூபாய். இத்திட்டத்தில், பயன்பெற விரும்பும் விவசாயிகள், தங்களது பங்களிப்பு தொகையாக, ஒரு லட்சத்து, 48 ஆயிரம் ரூபாய் செலுத்த தயாராக இருக்க வேண்டும். ஏற்கனவே, ஆறு "இன்ச்' ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டு, அதில், 200 அடி ஆழத்துக்குள் நீர் இருக்க வேண்டும். விவசாயிகளது நிலத்தில், சொட்டு நீர் பாசனம், தெளிப்பு நீர் பாசனம் கண்டிப்பாக அமைத்திருக்க வேண்டும். நிலத்தில், 200 சதுர மீட்டர் நிலம் நிழல் இல்லாத பகுதியாக இருக்க வேண்டும். இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள், பெயர், முகவரி, சர்வே எண், சிட்டா, அடங்கல், சொட்டுநீர் பாசனம் மற்றும் தெளிப்பு நீர் பாசனம் அமைத்திருக்கும் விவரம் ஆகியவற்றுடன் விண்ணப்பிக்க வேண்டும். திட்டத்தில் பயன்பெற விரும்பும், கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை, போச்சம்பள்ளி தாலுகாவை சேர்ந்த விவசாயிகள், "உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, 43, செட்டியம்பட்டி ரோடு, அம்பேத்கார் நகர், கிருஷ்ணகிரி' என்ற முகவரியிலும், ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவை சேர்ந்த விவசாயிகள், "உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியில் துறை, ராயக்கோட்டை ரோடு, சென்னசந்திரம், ஓசூர்' என்ற முகவரியிலும் விண்ணப்பங்களை அளிக்கலாம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## <u>தொடரும் மழையால் கரும்பு விவசாயிகள் மகிழ்ச்சி</u>

ஈரோடு: பவானி, கவுந்தப்பாடி பகுதிகளில் பெய்து வரும் மழையால், கரும்பு விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மாவட்டத்தில், கடந்த சில தினங்களாகவே, இரவு நேரத்தில் மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் கவுந்தப்பாடி, பவானி ஆகிய பகுதிகளில் அதிகபட்ச

மழையளவு பதிவானது. ஈரோடு மாவட்டத்தில், சத்தியமங்கலம்,5.8, கோபி,8, பவானிசாகர்,7.2, கொடிவேரி,9, எலந்தகுட்டைமேடு,9.2, கவுந்தப்பாடி,40.4, பவானி,25.4, அரச்சலூர்,1, சிவகிரி,10, முத்தூர்,5, மங்களப்பட்டி,7, காங்கேயம்,20 மி.மீட்டர் மழை பதிவானது. பவானி, கவுந்தப்பாடியில் பெய்து வரும் மழையால், கரும்பு விவசாயிகள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதுகுறித்து கவுந்தப்பாடியை சேர்ந்த விவசாயி சண்முகம் கூறியதாவது: நீண்ட நாட்களாகவே, வாய்க்கால், ஆறு மற்றும் கிணற்று நீரையே பாய்ச்ச வேண்டி இருந்தது. கடந்த சில தினங்களாக, தொடர்ந்து பெய்து வரும் மழையால், கரும்பு திரட்சியுடன் நன்றாக வளரும். இதனால், நீர் சத்து அதிகரித்து, விவசாயிகளுக்கு பெருமளவில் பலன் தரும். நெல்லுக்கும் மழை பலன் தரும். எனினும், கவுந்தப்பாடி, பவானி பகுதிகளில் கரும்பே பிரதானமாகும். இப்பயிருக்கு மழை பெரிதும் உதவும். வரும் நாட்களில் மழையை எதிர்பார்த்து காத்திருக்கிறோம், என்றார்.

## <u>கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி மாவட்டத்தில் 100.07 சதவீதம் நிறைவு</u>

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில், கோமாரி நோய் தடுப்பூசி பணி இலக்கை கடந்த, 100.07 சதவீதம் நிறைவு பெற்றுள்ளது. கால்நடைகளை அச்சுறுத்தும், கோமாரி நோய்க்கு, தேசிய அளவில், ஆண்டுக்கு, இரண்டு முறை தடுப்பூசி போடும் பணி நடக்கிறது. இந்தாண்டு, செப்டம்பர், 1ம் தேதி துவங்கி, 21ம் தேதி வரை நடந்தது. விடுபட்ட கால்நடைகளுக்கும் தடுப்பூசி போட வேண்டும் என்ற நோக்கில், செப்., 30ம் தேதி வரை நீட்டிப்பு செய்யப்பட்டது. இப்பணியில், மாநகராட்சி, நான்கு நகராட்சி, 42 டவுன் பஞ்., மற்றும் 225 பஞ்.,களில் மொத்தம், 3,69,650 பசு மற்றும் எருமையின கால்நடைகளுக்கு, 117 கால்நடை மருத்துவர்கள் தலைமையிலான குழுக்கள் மூலமாக தடுப்பூசி போடப்பட்டன. கன்று

போடும் பருவத்தில் இருக்கும் மாடுகள், உடல்நிலை சரியில்லாதவை, கால்நடைகளின் உரிமையாளர்கள் வெளியூர் சென்று விடுவது உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், விடுபட்ட கால்நடையினங்களுக்கும், ஊசி போடும் பணி நடந்தது. இதுவரை, 3,69,900 கால்நடையினங்களுக்கு, தடுப்பூசி போடப்பட்டுள்ளது. அதாவது, 100.07 சதவீதமாக, இலக்கை தாண்டியும் தடுப்பூச பணிகள் நிறைவடைந்துள்ளதாக, கால்நடைத்துறை இணை இயக்குனர் ஜெயராமன் தெரிவித்தார்.

**<u>தயார் ! : சம்பா சாகுபடிக்கு உரங்கள்... : குறைதீர் கூட்டத்தில் தகவல்</u>**

திருச்சி: "திருச்சி மாவட்டத்தில், சம்பா சாகுபடிக்கு தேவையான உரங்கள் கையிருப்பு உள்ளது,' என, குறைதீர் கூட்டத்தில் விவசாய துறை அதிகாரிகள் தெரிவித்தனர். திருச்சி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், நேற்று விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடந்தது. இதில், விவசாயிகள் எழுப்பிய பல்வேறு கேள்விகள் மற்றும் கோரிக்கைகளுக்கு, அதிகாரிகள் பதிலளித்து கூறியதாவது: திருச்சி மாவட்டத்தில், ஆண்டு சராசரியாக, 762 மி.மீ., மழை பெய்ய வேண்டும். கடந்த செப்டம்பர் மாதம் வரை பெய்ய வேண்டிய சராசரி மழை, 405.50 மி.மீ., இதுவரை, 284.70 மி.மீ., மழை பெய்துள்ளது. கடந்தாண்டில், 3,77 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள் திருச்சி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்டது. நடப் பாண்டில், 5.55 லட்சம் டன்கள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. திருச்சி மாவட்டத்தில் டெல்டா பகுதிகளில், 82 ஆயிரத்து, 750 ஏக்கரிலும், டெல்டா இல்லாத பகுதிகளில், 62,750 ஏக்கரிலும் சம்பா சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டு, பணிகள் நடந்து வருகிறது. இதுவரை டெல்டா பகுதிகளில், 2,606 ஹெக்டேரில் திருந்திய நெல் சாகுபடி முறையிலும், 6.500 ஹெக்டேரில் சாதாரண முறையிலும், டெல் டா இல்லாத பகுதிகளில், 340 ஏக்கரில் நடவு பணி முடிந்துள்ளது.

அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும், ஆந்திரா பொன்னி, மேம்படுத்தப்பட்ட வெள்ளி பொன்னி, கோ-43, அம்பை-19 ஆகிய நெல் ரக விதைகள் 391 மெட்ரிக் டன் இருப்பு வைக்கப்பட்டு, 105 டன்கள், 10 ரூபாய் மான்யத்தில் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. நடப்பு சம்பா பருவத்துக்கு தேவையான உரங்கள் யூரியா, 5, 436 மெட்ரிக் டன்னும், டி.ஏ.பி., 3,150 மெட்ரிக் டன்னும், பொட்டாஷ், 4,317 மெட்ரிக் டன்னும், கூட்டு உரம், 5,725 மெட்ரிக் டன்னும், மாவட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மற்றும் தனியார் உரக்கடைகளில் இருப்பு உள்ளது, என்றனர்.

**விவசாயிகள் மென்மை**

திருச்சி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், நேற்று நடந்த விவசாயிகள் கூட்டத்தில், சில சங்கங்களை சேர்ந்த நிர்வாகிகள் பங்கேற்கவில்லை.

இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது:

காவிரி நீர், முல்லை பெரியாறு பிரச்னைகளில், தமிழகத்துக்கு சாதகமான தீர்ப்புகளை பெற்று தந்தவர் ஜெயலலிதா. தற்போது, அவர் சொத்து குவிப்பு வழக்கில், சிறை தண்டனை விதிக்கப்பட்டதால், தமிழக அரசு அதிகாரிகளிடையே இறுக்கமான நிலை காணப்படுகிறது. அ.தி.மு.க., பொதுச்செயலாளர் ஜெயலலிதா, திருச்சி மாவட்டத்தை சேர்ந்த ஸ்ரீரங்கம் தொகுதியில் வெற்றி பெற்றவர். இதனால், தமிழக அரசின் நிலையை உணர்ந்து, புகார் மற்றும் கோரிக்கைகளை மென்மையாக எடுத்து கூறினோம், என்றனர்

## <u>குழித்தட்டு முறையில் மரவள்ளி கிழங்கு : நடவு செய்ய விவசாயிகள் ஆர்வம்</u>

தர்மபுரி; தரமான செடிகளை நட, குழிதட்டு மரவள்ளி கிழங்கு நாற்றுகளை விவசாயிகள் நடவு செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். தர்மபுரி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் முக்கிய பயிர்களில் மரவள்ளி கிழங்கும் ஒன்று. மாவட்டத்தில் மானாவரியாகவும், இறவை

சாகுபடியிலும், 18 ஆயிரத்து, 978 ஹெக்டர் பரப்பளவில் மரவள்ளி கிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது. விவசாயிகள் மரவள்ளி கிழங்குகளை நடவு செய்ய அடிக்குச்சியில் இருந்து நடு குச்சி வரை வெட்டி நடவு செய்து வந்தனர். இதனால் செடிகள் வைரஸ் நோய் மற்றும் வேர் அறுந்து பாதிக்கப்பட்டால் விவசாயிகளுக்கு எதிர்பார்த்த மகசூல் கிடைக் காததுடன், வைரஸ் நோயை கட்டுப்படுத்த செலவு செய்யும் நிலை ஏற்பட்டது. இந்நிலையில் விவசாயிகள் கடந்த, இரண்டு ஆண்டுகளாக பசுமை குடில்களில் குழித்தட்டு நாற்றங்கால்களில் வளர்க்கப்படும் மாரவள்ளி கிழங்கு நாற்றுகளை பயன்படுத்தி வருகின்றனர். இதனால் செடிகள் வைரஸ் நோய் தாக்குதலில் இருந்து பாதுகாக்கப்படுவதுடன், வேர் உறுதியாக உள்ளதால் மகசூல் அதிகளவில் கிடைப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர். மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்த மழையை அடுத்து விவசாயிகள் குழி தட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மரவள்ளி கிழங்கு நடவு செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் கூறியதாவது:

குழித்தட்டு நாற்றுக்கள் தரமானதாகவும், உரிய வளர்ச்சியுடன் கிடைப்பதால், விவசாயிகளுக்கு மகசூல் அதிகளவில் கிடைக்கிறது. தர்மபுரி மாவட்டம் முழுவதும், 100க்கும் மேற்பட்டோர் பசுமை குடில்களில், குழித்தட்டு முறையில் மரவள்ளி கிழங்கு நாற்றுக்கள் தயாரித்து விற்பனை செய்யப்படுகிறது. பசுமை குடில் அமைத்து நாற்றங்கால் தயாரிக்கவும், பசுமை குடில்களின் கீழ் விவசாய பணிகள் மேற்கொள்ள செய்யப்படும் மொத்த மதிப்பில், 50 சதவீதத்தை தோட்டக்கலைத்துறை சார்பாக, அரசு மானியமாக வழங்கப்படுகிறது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## 1,100 ஹெக்டரில் சிறு தானியங்கள் சாகுபடி வேளாண் துறை இணை இயக்குனர் தகவல்

பெரம்பலூர்: பெரம்பலூரில், வேளாண்மைத் துறை சார்பில், பாரம்பரிய உணவு திருவிழா நடந்தது. விழாவுக்கு, வேளாண் இணை இயக்குனர் அழகிரிசாமி தலைமை வகித்து, உணவு திருவிழாவை துவக்கி வைத்து பேசியதாவது: பாரம்பரிய சிறுதானியங்களான கம்பு, சோளம், வரகு, குதிரை வாலி, திணை, சாமை ஆகியவற்றை நம் முன்னோர்கள் பயன்படுத்தியதால், நோயின்றி ஆரோக்கியமாக வாழ்ந்தனர். நாமும், சிறுதானிய உணவை பயன்படுத்தி ஆரோக்கியமாக வாழ வேண்டும். சிறுதானிய சாகுபடி பரப்பு மிகவும் குறைந்து வருகிறது. சிறுதானிய சாகுபடி பரப்பை அதிகபடுத்தவும், அதிகளவில் பயன்படுத்தி உடல் ஆரோக்கியத்தைப் பெறவும் விவசாயிகள் முயற்சிக்க வேண்டும். பெரம்பலூர் மாவட்டத்தில், 1,100 ஹெக்டர் பரப்பளவில் சிறுதானியங் கள் பயிரிடப்பட்டு வருகிறது. சிறுதானிய பரப்பை அதிகப்படுத்தும் நோக்கத்தோடு, தமிழக அரசு நீர்வள நிலவளத் திட்டத்தில், சாமை, வரகு, குதிரை வாலி, திணை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு, 4,000 மானியமாக வழங்கப்படுகிறது. இந்த வாய்ப்புகளை பயன்படுத்தி, விவசாயிகள் சிறுதானிய உணவு வகைகளை அதிகளவில் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். தொடர்ந்து, பருத்தி ஆராய்ச்சி நிலைய தலைவர் கவிமணி, வேளாண் விஞ்ஞானிகள் ஆனந்தன், பாஸ்கரன், ரோவர் வேளாண் அறிவியல் மைய ஒருங்கிணைப்பாளர் விஜயலெட்சுமி ஆகியோர் சிறு தானியங்களின் பயன்பாடு குறித்து பேசினர். இதில் சிறுதானிய லட்டு, கம்பு பிஸ்கட், சோள பிஸ்கட், கேழ்வரகு பிஸ்கட் உள்ளிட்ட சிறுதானிய பொருள்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது. வேளாண்மை துணை இயக்குனர் அய்யாசாமி உட்பட பலர் பங்கேற்றனர்.

## கடலை சாகுபடி: மகசூல் அதிகரிப்பு; மானாவாரி விவசாயிகள் மகிழ்ச்சி

குஜிலியம்பாறை : தொடர் மழையால், கடலை சாகுபடி செய்த விவசாயிகளுக்கு நடப்பாண்டில் மகசூல் அதிகரிப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மானாவாரி கடலை சாகுபடி செய்த விவசாயிகள் போதிய மழை இல்லாததால் பயிர்கள் காய்ந்துவிடுமோ என அச்சமடைந்திருந்தனர். கடந்த 15 நாட்களாக குஜிலியம்பாறை ஒன்றிய பகுதியில் தொடர் மழை பெய்து வருகிறது. அனைத்து குளங்களும் தண்ணீரால் நிரம்பியுள்ளன. இதனால், மானாவாரி நிலத்தில் நிலக்கடலை விவசாயத்தில் ஈடுபட்ட விவசாயிகள் நிம்மதி அடைந்துள்ளனர். இதே நிலையில் மழை தொடர்ந்தால் நடப்பு ஆண்டில் இப்பகுதி மக்கள் குடிநீர் பிரச்னையில் இருந்து தப்பித்து கொள்வதோடு விவசாயத்திலும் கூடுதல் மகசூல் பெறுவர். பாறையூரை சேர்ந்த விவசாயி செந்தில் கூறியதாவது: "மானாவாரியில் பயிரிட்ட கடலை விவசாயம் மழை இல்லாமல் போனதால் காய்ந்து விடும் என நினைத்தோம். தொடர்ந்து மழை பெய்ததால் தப்பித்துள்ளோம். நடப்பு ஆண்டில் மானாவாரி விவசாயம் செழிக்கும் என எதிர்பார்க்கிறோம்,' என்றார்.

## முருங்கை விலை அதிகரிப்பு

ஒட்டன்சத்திரம் : சீசன் முடிவுற்றதால் ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் முருங்கைக்காய் கிலோ ரூ.28 க்கு விற்றது. ஒட்டன்சத்திரம், கள்ளிமந்தையம், சாலைப்புதூர் மற்றும் தாராபுரம் பகுதிகளில் செடி முருங்கைக்காய் அதிகமாக விளைவிக்கப்படுகிறது. இவற்றின் காய்ப்பு காலம் சில நாட்களில் முடிவுபெறும் நிலையில் உள்ளது. இதனால் குறைந்தளவிலான முருங்கைக்காய்களே மார்க்கெட்டிற்கு கொண்டு வரப்படுகின்றன. தேவை அதிகரித்திருப்பதால் முருங்கைக்காயின் விலை ஏறுமுகமாக உள்ளது.கடந்த மாதம் ஒரு கிலோ முருங்கைக்காய் ரூ.14 க்கு விற்றது. நீண்டநாட்களாக விலையில் மாற்றமில்லாமல் இருந்தது. அதன் பின்னர் ரூ.20 க்கு விற்றது. தற்போது இதன் விலை மேலும் அதிகரித்து ரூ.28 க்கு விற்கப்படுகிறது. கமிஷன் கடை உரிமையாளர் முருகேசன்

கூறுகையில்,"" சீசன் முடியும் தருவாயில் இருப்பதால் முருங்கை விலை ஏறுமுகமாக உள்ளது," என்றார்.

## "மிளகு'க்கு மானியம்

திண்டுக்கல் : சிறுமலை மற்றும் கொடைக்கானலில் பயிரிடப்படும் மிளகிற்கு 100 ஏக்கர் வரை மானியம் வழங்க இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.விவசாயிகளுக்கு எக்டேருக்கு ரூ. 20 ஆயிரம் மதிப்புள்ள நாற்றுக்கள், உரம் மற்றும் இடுபொருட்கள் வழங்கப்படும் என திண்டுக்கல் மாவட்ட தோட்டக்கலைத்துறை இணை இயக்குனர் (பொ) ராமநாதன் தெரிவித்தார்.

## தேனி இளநீருக்கு மும்பையில் கிராக்கி

தேவாரம் : தேனி மாவட்டத்தில் விளையும் இளநீருக்கு மும்பையில் நல்ல கிராக்கி உள்ளது. நல்ல விலை கிடைப்பதால் தோட்டங்களுக்கு நேரடியாகச் சென்று மொத்த விற்பனையாளர்கள் கொள்முதல் செய்கின்றனர். தேனி மாவட்டத்தில் கம்பம் பள்ளத்தாக்கு, வருஷநாடு பகுதியிலும் நீர் வளம் மிக்க பெரியகுளம்,போடி, கோம்பை மலையடிவார தோட்டங்களில் பல்லாயிரம் ஏக்கரில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கூலி தொழிலாளர்கள் பற்றாக்குறையால் விவசாயிகள் தென்னை பயிரிடுகின்றனர். குறிப்பாக,குறுகிய காலத்தில் பலனளிக்கும் டி.என்.டி., ரக கன்றுகளை பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். இந்த மரங்களிலிருந்து கிடைக்கும் இளநீர் பள,பளப்பாகவும் அதிக தண்ணீரும் இருப்பதால் சந்தையில் அதிக விலைக்கு விற்பனையாகிறது. கோடை காலத்தில், இவ்வகை இளநீருக்கு தட்டுப்பாடு ஏற்படும் நிலை உள்ளது. இதனால், வயது முதிர்ந்த மரங்களை வெட்டி விட்டு, டி.என்.டி., கன்றுகள் பரவலாக பயிரிடப்படுகிறது. மொத்த வியாபாரி ஐயப்பன் கூறுகையில், "செவ்விளநீருக்கு எப்போதுமே நல்ல கிராக்கி உள்ளது. கோடை

காலத்தில்,சென்னை, மதுரை, திருச்சி உள்ளிட்ட நகரங்களுக்கு தேவையான இளநீர் சப்ளை செய்வதற்கே பற்றாக்குறை ஏற்படுகிறது. மும்பை, டில்லி, கான்பூர், ராஜஸ்தான் பகுதிகளுக்கு கர்நாடகாவிலிருந்து அதிகளவில் இளநீர் அனுப்பப்படுகிறது. அங்கு தட்டுப்பாடு ஏற்படும் போது, தேனி, திண்டுக்கல், பொள்ளாச்சி பகுதியிலிருந்து இளநீர் அனுப்பப்படும். இங்கிருந்து மும்பைக்கு ஒரு லோடு(5 ஆயிரம் இளநீர்) அனுப்ப, 45 ஆயிரம் ரூபாய் வாடகை. இளநீர் பறிப்பு, லோடேற்றும் கூலி என ஒரு காய்க்கு மூன்று ரூபாய் செலவகிறது. செவ்விளநீர் தோட்டங்களிலேயே 12 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. மும்பை செல்லும் ஒரு இளநீர் அடக்க விலை 25 ரூபாயாகிறது. மழை காலத்தில் குறைந்த லாபம் கிடைக்கும். கோடை காலத்தில் நல்ல லாபம் கிடைக்கும்", என்றார்.

## <u>வராகநதியில் நீர்வரத்தால் நிரம்பும் கண்மாய்கள்</u>

தேவதானப்பட்டி : பெரியகுளம் வராகநதியில் நீர் வரத்து இருப்பதால் சில்வார்பட்டி, நல்லகருப்பன்பட்டி, ஜெயமங்கலம் கண்மாய்களுக்கு தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. பெரியகுளம் வராகநதியில் வரும் நீர் மூலம் குள்ளப்புரம், ஜெயமங்கலம், நல்லகருப்பன்பட்டி, சில்வார்பட்டி, பொம்மிநாயக்கன்பட்டி, மருகால்பட்டி, சிந்துவம்பட்டி உட்பட 15 மேற்பட்ட கண்மாய்களுக்கு நீர் ஆதாரமாக உள்ளது. கடந்த 3 ஆண்டுகளாக ஆற்றின் நீர்பிடிப்பு பகுதியில் மழை இல்லை. இதனால் வராகநதியில் நீர்வரத்து இல்லை. வராகநதியை நீர் ஆதாரமாக உள்ள கண்மாய்கள் அனைத்தும் வறண்டிருந்தன. 4 ஆயிரம் ஏக்கர் பரப்பில் முதல்போக நெல் சாகுபடியை விவசாயிகள் தவிர்த்தனர். இந்நிலையில் கடந்த 2 நாட்களாக மேற்க்குதொடர்ச்சி மலை பகுதியில் மழை பெய்து வருகிறது.இதனால் வராகநதியிலும் மழைநீர் வெள்ளம் வருகிறது. இதனால் சில்வார்பட்டி சிறுகுளம், நல்லகருப்பன்பட்டி நாரணன்குளம், ஜெயமங்கலம் வேட்டுவன்குளம், குள்ளப்புரம் பெரிய கண்மாய்

ஆகியவற்றிற்கு நீர் வரத்துள்ளது. மழை தொடர்ந்து பெய்யும் நிலையில், விவசாயிகள் நெல் நாற்றாங்கால் பணியை துவங்க தயாராக உள்ளனர்.

**இலைப்புள்ளி நோய் தாக்குதல்; வாழை விவசாயிகள் பாதிப்பு**

தேனி : பகலில் கடும் வெயில், இரவில் கடும் பனி என மாறுபட்ட சீதோஷ்ண நிலை நிலவுவதால் வாழையில் இலைப்புள்ளி நோய் தாக்குதல் ஏற்பட்டுள்ளது. மாறுபட்ட காலநிலையில் உருவாகும் பூஞ்சானத்தால் இந்நோய் ஏற்படுகிறது. இந்நோய் பாதித்த வாழை இலைகளில் வெளிறிய மஞ்சள் அல்லது பச்சை கலந்த மஞ்சள் நிறத்தில் சிறு கோடுகள் இலை நரம்புகளுக்கு இணையாக தோன்றும். நாளடைவில் வளர்ந்து நீள் வட்ட வடிவில் கரும்பழுப்பு நிறமாக மாறும். பின் இந்த இலைப்புள்ளியின் நடுப்பகுதி சாம்பல் நிறமாகவும், ஓரப்பகுதியில் மஞ்சள் நிற வளையமும் காணப்படும். பின்னர் முற்றிய புள்ளிகள் ஒன்றோடு ஒன்று இணைந்து பெரிய புள்ளிகளாக மாறி இலை காயத்தொடங்கும். இலை முழுமையாக காய்ந்து சருகுகளாக மாறி தண்டு பகுதியை பாதிக்கும். வாழைக் காய்களின் வளர்ச்சிக்கு தேவையான உணவு தயாரிக்கும் பகுதி இலையில் உள்ளது. இலைப்புள்ளி நோயினால் வாழைக்காய்கள் வளர்ச்சி பாதிக்கின்றன. அக்டோபர், நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் இந்நோய் அதிகம் காணப்படுகிறது. தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் கூறியதாவது: நோய் பாதித்த தோட்டங்களில் நல்ல வடிகால் வசதி ஏற்படுத்தி தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நோய் தாக்கப்பட்ட இலைகளை வெட்டி எடுத்து அவற்றை தோட்டத்தில் இருந்து அகற்றி தீயிட்டு அழிக்கவும். வாழை சாகுபடி செய்த 4 அல்லது 5ம் மாதம் மேங்கோசெப் அல்லது கார்பென்டாசிம் 2 கிராம் ஒரு லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவும். 6 அல்லது 7ம் மாதம் காப்பர் ஆக்சி குளோரைடு 2.5 கிராம் ஒரு லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவும். 8 அல்லது 9ம் மாதம் புரோப்பிகோனோசோல் ஒரு மில்லி அல்லது 1.5 மில்லி ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து

தெளிக்கவும். 10 அல்லது 11வது மாதம் பைராகிளாஸ்டிரோபின் 1.5 கிராம் ஒரு லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவும். இந்த மருந்துகளுடன் ஒட்டும் பசை லிட்டருக்கு ஒரு மி.லி., வீதம் கலந்து தெளிக்க வேண்டும். அல்லது பனோல் ஆயிலை லிட்டருக்கு 5 மி.லி., வீதம் தெளிக்க வேண்டும். பனோல் ஆயில் பூஞ்சான் வித்துக்களையும், நோய் கிருமியையும் அழிக்க கூடியது. மழை, பனிக்காலங்களில் இந்தநோய் வேகமாக பரவுவதால் மேற்கூறிய மருந்துகளை தெளித்து வருவதன் மூலம் நோயை கட்டுப்படுத்தி விளைச்சல் பெற முடியும். இவ்வாறு கூறியுள்ளார்.

## அணைப்பிள்ளையார் அணைக்கு நீர் வரத்து

போடி : கேரளா, போடி மலைப்பகுதிகளில் பெய்து வரும் மழையால் போடி அணைப்பிள்ளையார் அணைப்பகுதியில் நீர்வரத்து அதிகரித்து அருவிபோல் நீர் கொட்டுகிறது. கேரளாவில் கடந்த 2 மாதங்களாக மழை பெய்து வருகிறது. இதோடு கடந்த 2 வாரங்களாக குரங்கணி, கொட்டகுடி,போடிமெட்டு உள்ளிட்ட மலைப்பகுதிகளில் மழை பெய்து வருகிறது.இதனால் வறண்டு கிடந்த கொட்டகுடி ஆற்றில் தற்போது நீர் வரத்து அதிகரித்து கண்மாய்களுக்கு சென்று வருகிறது. இதனால் நிலத்தடி நீர்மட்டும் உயரும் என்பதால் விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.நீர் வரத்தால் போடி அணைப்பிள்ளையார் அணைப்பகுதி ஆற்றில் நீர் வரத்து வர துவங்கியதோடு,வெள்ளியை உருக்கி விட்டார் போல் அருவி போல் நீர் கொட்டுகிறது. கேரளா செல்லும் சுற்றுலா பயணிகள் இங்கு வந்து செல்கின்றனர்.பள்ளி விடுமுறை என்பதால் போடி பகுதியை சேர்ந்தவர்கள் அருவியில் குளித்து செல்கின்றனர்.

## மழையை நம்பாமல் மாற்று பயிர் விவசாயத்துக்கு மாறுங்கள்!

## லாபகரமான சாகுபடிக்கு குதிரை வாலி "பெஸ்ட்'

காரைக்குடி : விவசாயிகள், நெல் பயிரை மட்டுமே நம்பியிருக்காமல், மாற்று பயிராக, சிறு தானியங்களை பயிரிட வேண்டும், என விவசாய

அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். தமிழக மக்கள் தொகையில் 10 நபர்களில், ஒருவருக்கு இன்று சர்க்கரை நோயும், 25 பேரில், இரண்டு பேருக்கு சர்க்கரை நோய்க்கு முந்தைய நிலையும் இருப்பதாக சமீபத்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. 45 லட்சம் பேருக்கு சர்க்கரை நோயின் பாதிப்பு உள்ளது. சர்க்கரை நோய் வருவதற்கு பல்வேறு காரணங்கள் கூறப்பட்டாலும், உணவு பழக்கம் ஒரு முக்கியமான காரணம். உணவில் முக்கிய பங்களிக்கும், அரிசி நவீன காலத்தில், பாலீஸ் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. இதனால், அரிசியின் முதல் மேலடுக்கில் காணப்படும், நார்சத்து, மக்னீசியம், விட்டமின்கள் முழுமையாக நீக்கப்பட்டு, மாவு சத்து மட்டுமே இருக்கும். இந்த அரிசியை தினந்தோறும் உணவாக உட்கொள்ளும்போது, அது சர்க்கரை நோய்க்கு முக்கிய காரணமாகிறது. 35 வயதுக்கு மேல், இந்நோய் வராமல் தடுப்பதற்கும், தள்ளி போடுவதற்கும், அரிசி உணவை குறைந்து கொண்டு, சிறுதானியங்களை உணவாக எடுத்து கொள்ள வேண்டும், என டாக்டர்கள் பரிந்துரைக்கின்றனர். ஆனால், மக்களின் தேவைக்கேற்ப சிறுதானிய பயிர்கள் சாகுபடி இல்லை. இதை விவசாயிகள், உணர்ந்து எப்போதாவது வரும் மழைக்காக காத்திராமல், எப்போதே பெய்த மழையால் உயிர்வாழும் சிறுதானியங்களை பயிரிட வேண்டும், என்கின்றனர் வேளாண்துறை அதிகாரிகள். கல்லல் வேளாண் உதவி இயக்குனர் கணேசன் கூறும்போது: நெல் சாகுபடிக்கு குறைந்தது 125 நாட்களும், அதிக அளவில் தண்ணீர், கூலியாட்கள், பணம் தேவைப்படுகிறது. போதிய மண் வளம் இல்லாத நிலத்தில் நெல் சாகுபடி செய்யும் போது, அதன் மகசூல் குறைந்து விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆனால், 90 நாட்களில் குதிரைவாலி பயிர், மண் வளம் இல்லாத நிலத்தில் கூட மிக குறைந்த நீரிலும் லாபகரமாக சாகுபடி செய்யலாம். ஹெக்டேருக்கு 2,600 கிலோ, 5,400 கிலோ தட்டை மகசூலாக கிடைக்கும். பூச்சி மற்றும் நோய் தாக்குதல் இன்றி வறட்சியை

தாங்கி வளரும் தன்மை உடையது. மானாவாரி பயிராக செப்., அக்., மாதங்களிலும், இறவை பயிராக, பிப்ரவரி, மார்ச் மாதங்களிலும் சாகுபடி செய்திடலாம். கல்லல் ஒன்றியத்தில், 2014-15-ம் ஆண்டு நீர்வள, நிலவள திட்டத்தில் ஒரு ஹெக்டேர் பயிர் சாகுபடி செய்ய உள்ள விவசாயி களுக்கு, ரூ.4 ஆயிரம் மானியம் வழங்கப்பட திட்டம் தயார் செய்யப்பட்டு வருகிறது. ஆர்வமுள்ள விவசாயிகள் உதவி இயக்குனர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம், என்றார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வறட்சி பாதிப்புக்கு விரைவில் நிவாரணம் விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் கலெக்டர் உறுதி**

திருச்சி: திருச்சி மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டாக வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவில் நிவாரணம் கிடைக்கும் என்று குறைதீர் கூட்டத்தில் கலெக்டர் உறுதியளித்தார்.திருச்சி கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நேற்று நடந்தது. கலெக்டர் ஜெயஸ்ரீ தலைமை வகித் தார். கூட்டத்தில் காவிரி டெல்டா பாசன விவசாயி கள் நலச்சங்க துணை செயலாளர் கவுண்டம் பட்டி சுப்பிரமணியம் கூறியதாவது: ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டமாக இருந்த காலத்தில் காவிரி யில் பிரிந்து வரும் கட் டளை மேட்டு வாய்க்கால் மாயனூர் முதல் தாயனூர் வரை வலது மற்றும் இடது கரையில் நீரேற்று பம்ப் மூலம் நீர் எடுத்து மேட்டு நிலங்களுக்கு கொண்டு செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நீரேற்று பம்ப் மூலம் எடுக்கப்படும் நீர் அளவு எவ்வளவு, யார், யார் எடுப்பது என்று தெரியப்படுத்த வேண்டும் என்றார்.கலெக்டர் ஜெயஸ்ரீ: பம்ப்செட் மூலம் எடுக்கப்படும் தண்ணீர் அளவு என்ன, யார், யாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள் ளது. அனுமதி இல்லாமல் எடுக்கும் நபர்கள் யார் என கண்டறிந்து

கணக்கெடுக்க வேண்டும். அனுமதி இல்லாமல் எடுக்கும் நபர் களை பொதுப்பணித்துறை அதிகாரிகள் கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் அயிலை சிவசூரியன் (இ. கம்யூ): கடந்த 3 ஆண்டுக ளாக தென்மேற்கு பருவ மழை மற்றும் வடகிழக்கு பருவமழை பொய்த்தது காரணமாகவும், கர்நாடகா தமிழகத்திற்குரிய தண்ணீரைவிட மறுத்ததின் கார ணமாகவும் வேளாண் உற் பத்தி பாதிக்கப்பட்டு விவசாயிகளுக்கு இழப்பை ஏற் படுத்தியது. வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இதுவரை எந்தவித நிவாரணமும் வழங்கவில்லை என்றார்.தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் மாசி லாமணி (மா.கம்யூ): கடந்த 3 ஆண்டாக தமிழகத்தில் போதிய மழை இல்லாமல் மானாவரி பயிர்கள், தென்னை, வாழை, மா, எலுமிச்சை போன்ற பயிர் கள் பாதிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் தங்களுடைய கவனத்துக்கு கொண்டு வந்தபோது சம்பந்தப்பட்ட துறையினர் பயிர் வாரி கணக்கிடப்பட்டு அரசுக்கு பரிந்துரை செய்துள்ளதாக கூறினீர்கள். ஒவ்வொரு மாதமும் நடை பெறும் குறைதீர் கூட்டத் தில் இந்த கோரிக்கை விடுத்த வண்ணமாகஇருந்து வருகிறது. இதில் எவ்வித பலனும் இல்லை. இனிமேலாவது இதற்கு தீர்வு கிடைக்குமா என் றார்.கலெக்டர் ஜெயஸ்ரீ: திருச்சி மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்கள் என் னென்ன என்று வேளாண் துறை மற் றும் வருவாய்த் துறை மூல மாக கணக்கிடப்பட்டு அர சுக்கு பரிந் துரை செய்யப்பட்டுள்ளது. இதுதொடர் பாக ஒவ்வொரு மாதமும் தான் விவசாயிகள் கூறி வருகிறீர்கள். ஆனால் நான் மாதத்துக்கு 4 தடவை சம்பந்தப்பட்டத்துறை அதிகாரிக ளுடன் பேசி வருகிறேன். விரைவில் நிவாரணம் கிடைக்கும். கிடைத்து விடும் என்ற நம்பிக்கை உள் ளது என்றார்.

## மாடித் தோட்டம் அமைக்க மாணவர்களுக்கு பயிற்சி

வத்தலக்குண்டு: மாணவர்களுக்கு, மாடித்தோட் டம் அமைக்க பட்டிவீரன்பட்டி பள்ளியில் பயிற்சி அளிக்கப்பட்டது. பட்டிவீரன்பட்டி

என்.எஸ்₹.வி.வி ஆண்கள் மேல் நிலைப் பள்ளியில், தேசிய பசுமைப்படை சார்பாக ஓசோன் தினவிழா நடந்தது. பள்ளி தலைவர் அசோக்பாபு தலைமை வகித்தார். செயலாளர் கோபிநாத், தலைமையா சிரியர் ராஜகுரு ஆகியோர் முன்னிலை வகித்தனர். பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர் ரவீந்திரன் வரவேற்றார். விழாவில், 'மாணவர் களுக்கு மாடித்தோட்டம் அமை க்க பயிற்சி அளிக்கப்பட்டது. ஓசோன் தினம் பற்றி நடந்த, பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது. மாணவர்களுக்கு இலவசமாக மரக்கன்றுகள் வழங்கப்பட்டது. ஓசோன் படலத்தை சிதைக்கும் குளோரா புளூ ரோ கார்பன், நைட்ரஜன் ஆக்ஸைடு, மீத்தேன் பயன்பாட்டை குறைப்போம், அதிக அளவில் மரம் வளர்ப் போம்' என மாணவர்கள் உறுதிமொழி எடுத்தனர்.

## <u>ஆமணக்கில் பூச்சி மேலாண்மை வேளாண்துறை ஆலோசனை</u>

பழநி: ஆமணக்கில், பூச்சி மேலாண்மை குறித்து வேளாண்துறையினர், விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கி உள்ளனர். இதுகுறித்து அவர்கள் கூறியது: முக்கிய எண்ணெய்வித் தான ஆமணக்கு, தமிழகத் தில் சுமார் 5.02 லட்சம் எக்டேர்களில் மானாவாரியாகவும், இறவையிலும் பயிரிடப்படுகின்றன. ஆமணக்கு பயிரிட பாத்தி அமைத்தல், உரமிடுதல், நுண் ஊட்டமிடுதல், ஊட்டச்சத்து கலவை தெளிப்பு, விதை அளவு, விதை நேர்த்தி, களை கட்டுப் பாடு, பாசனம் ஆகியவற்றை வேளாண்துறை யினிடம் ஆலோசனை பெற்று, கடைபிடித்தால் நல்ல விளைச்சல் பெறலாம். அதுபோல், பூச்சி மேலா ண்மையில் விவசாயி கள் அதிக அக்கறை காட்ட வேண்டும். கோடை மழை க்கு முன் வரப்புகளிலும், நிழ லான இடங்களிலும், மண்ணில் புதைந்துள்ள கூட்டுப்புழுக்களை உழவு செய்து வெளிக்கொண்டு வந்து அழிக்க வேண்டும். விளக்குப்பொறி அல்லது தீப்பந்தம் வைத்து தாய் அந்திப்பூச்சிகளைக் அழிக்க வே ண்டும்.

பயிர்களில் இட்ட முட்டைகளை சேகரித்து அழிக்க வேண்டும். வயல்க ளைச் சுற்றி 30 சென்டிமீட்டர் ஆழம், 25 சென்டிமீட் டர் அகலத்தில் செங்குத்தாக குழிகள் அமைத்து புழுக்கள், வயல்களில் பரவுவதை தடுக்க வேண்டும். எக்டருக்கு 25 கிலோ என்ற அளவில், பாசலோன் 4%, கார்பாரில் 10%, பெனிட்ரோதியான் 2% ஆகியவை கலந்து தெளிக்க வேண்டும். 1 எக்டேருக்கு சூடோமோனாஸ் ஃபுளூரசன்ஸ் 2.5 கிலோவுடன், 50 கிலோ மக்கிய தொழுவுரத்தை கலந்து தெளிக்க வேண்டும். மேலும், நோய் தென் படும் இடங்களில் கார்பன் டா சிம் லிட்டருக்கு 1 கிராம் என்ற அளவில், கலந்து தெ ளித்தால் பூச்சிகளின் தாக்கு தல் இருக்காது. இதுதொடர் பான கூடுதல் தகவல்களுக்கு அந்தந்த பகுதி வேளாண் அலுவலர்களையோ அல் லது வேளாண் அலுவலகத் தை தொடர்பு கொள்ளலாம் என வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

## <u>காஞ்சிபுரத்தில் பலத்த மழை விவசாயிகள் மகிழ்ச்சி</u>

காஞ்சிபுரம், : காஞ்சிபுரத்தில் நேற்று பலத்த மழை பெய்ததால், நகரில் உள்ள முக்கிய சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். காஞ்சிபுரத்தில் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. ஆனாலும் வெப்பத்தின் தாக்கம் குறையவில்லை. நேற்று காலை முதல் மதியம்வரை வெயில் வாட்டி வதைத்தது. பிற்பகல் கருமேகம் திரண்டு குளிர் காற்று வீசியது. 2.30 மணிக்கு பெய்யத் துவங்கிய மழை மாலை 4 மணி வரை நீடித்தது. காஞ்சிபுரத்தில் உள்ள காந்தி ரோடு, நான்கு ராஜ வீதிகள், காமராஜர் வீதி, மேட்டுத் தெரு, வள்ளல் பச்சையப்பன் தெரு உள்ளிட்ட முக்கிய தெருக்களில் மழைநீர் பெருக்கெடுத்து ஆறாக ஓடியது. ரங்கசாமி குளம் தெரு, கீரை மண்டபம், மடம் தெரு, மேட்டு தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் குளம்போல் தேங்கி நின்றது. ஆலடி பிள்ளையார் கோவில் தெரு - மேட்டுத் தெரு சந்திப்பு பகுதியில் முழங்கால் அளவுக்கு மழைநீர்

தேங்கியதால், வாகன போக்குவரத்து பாதிக்கப்பட்டது. காஞ்சிபுரம் நகராட்சி துப்புரவு பணியாளர்கள் நீண்ட நேரம் போராடி, சாலைகளில் தேங்கிய மழைநீரை அப்புறப்படுத்தினர். காஞ்சிபுரத்தில் நேற்று ஒன்றரை மணி நேரம் பெய்த மழையால் வெப்பம் தணிந்தது. இதனால் பொதுமக்களும், விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்தனர்.

**<u>தொடர் மழையால் பசுமையாகும் மேய்ச்சல் நிலங்கள்</u>**

க.பரமத்தி: க.பரமத்தி ஒன்றியப் பகுதியில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் தொடர் மழையால், மேய்ச்சல் நிலங்கள் புற்கள் முளைத்து, பசுமையாகக் காட்சியளிக்கின்றன. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். க.பரமத்தி ஒன்றியத்தில் அணைப்பாளையம், அஞ்சூர், ஆரியூர், அத்திப்பாளையம், சின்னதாராபுரம், எலவனூர், கூடலூர் கிழக்கு, கூடலூர் மேற்கு, கார்வழி, காருடையம்பாளையம், கோடந்தூர், குப்பம், மொஞ்சனூர், முன்னூர், புஞ்சைகாளகுறிச்சி, நடந்தை, நெடுங்கூர், க.பரமத்தி, பவித்திரம், நஞ்சைகாளகுறிச்சி, புன்னம், இராஜபுரம், சூடாமணி, தென்னிலை கிழக்கு, தென்னிலை மேற்கு, தென்னிலை தெற்கு, தொக்குப்பட்டி, துக்காச்சி, தும்பிவாடி, விஸ்வநாதபுரி ஆகிய 30 ஊராட்சிகள் உள்ளன. இங்குள்ள குக்கிராமங்களில் கடந்த ஆண்டு பருமழை போதிய அளவு பெய்யாததால் விவசாயிகள், விவசாயத்தைத் தவிர்த்து கால்நடை வளர்ப்பதை தொழிலாக செய்து வந்துடன் இதற்கு பசுந்தீவனங்கள் அதிக விலை கொடுத்து வேறு பகுதிகளில் இருந்து வாங்கி வந்து கால்நடைகளுக்கு வழங்கி காப்பாற்றி வந்தனர். இந்நிலையில் கடந்த சில நாட்களாக பெய்த மழையால் இளம்புற்கள் வந்துள்ளன. இதனால் இயற்கையில் வளரும் பசுமையான இலை தழை கள், புற்கள், கீரை வகை களை கறவை மாடுகள் உட்கொள்வதால் அதிகமான பால் சுரக்கும் என்பதால் ஒன்றிய பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கம்பு மாவு, சோள மாவு, புண்ணாக்கு, பருத்திகொட்டை போன்றவை வெளிமார்க்கெட்டில்

விலைக்கு வாங்கி வந்து அவற்றை கால்நடைகளுக்கு முறைப்படி வழங்கி வந்தனர். இதனால் விவசாயிகள் மிகவும் அவதிப்பட்ட நிலையில், தற்போது கடந்த நாள்களாக பெய்து வரும் மழையால் மேய்ச்சல் நிலங்கள் பசுமையானது விவசாயிகளுக்கும், கால் நடை வளர்ப் போருக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக விவசாயிகள் பலரும் தெரிவிக்கின்றனர். இதுகுறித்து கால்நடைகளை வளர்க்கும் விவ சாயி கூனம்பட்டி கார்த்திகேயன் கூறுகை யில், க.பரமத்தி ஒன்றியப் பகுதியில் பெய்து வரும் மழையால் மேய்ச்சல் நிலங்களில் புற்கள் இலை தழை கள் முளைக்கத் தொடங்கி பசுமையாக காட்சி அளிக்கிறது. இதனால் தீவனங்களுக்காக விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப் போர் அலைவது குறைந்துள்ளது. மேலும் இது ஆடு, மாடு வளர்ப்பவர்களுக்கு பெரும் மகிழ்ச்சியை உருவாக்கி உள்ளது என்றார்.

**<u>மழையில்லா பகுதிகளில் சொட்டு நீர்ப் பாசனத்தை நாடும் விவசாயிகள்</u>**

கரூர்: கரூர் மாவட்டத்தில் போது மான மழை பெய்யாத பகுதிகளில் சொட்டு நீர்ப் பாசனத்தை விவசாயிகள் நாடத் துவங்கியுள்ளனர்.கரூர் மாவட்டத்தில் குறுவை, சம்பா, நவரை, ஆகிய பருவங்களில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. 95% நெல் சாகுபடி சம்பா பருவத்திலேயே மேற்கொள்ளப்படுகிறது. மழை இல்லாதாதால் நெல் மற்றும் பிற பயிர்களின் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது. வேளாண் மை துறை சார்பில் விவசாயிகளுக்கு பல்வேறு தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. நெல் பயிரை பொறுத்தளவில் திருந்திய நெல் சாகுபடி முறை கடைபிடிக்கப்படுகிறது. தென்மேற்கு பருவமழை பொழிவும் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு குறை வாகவே பெய்திருக்கிறது. இந்நிலையில் கடந்த சில நாட் களாக மழை தொடர்ந்து பெய்து வருகிறது, இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தள்ளனர். சம்பா சாகுபடி பணிகள் காவிரி பாசன பகுதியில் தொடங்கி நடைபெறுகிறது. பிறபகுதியிலும் நெல், வாழை, கரும்பு, சூரியகாந்தி

மற்றும் பயறு வகைகள் சாகுபடியை விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர். மேட்டூர் அணையில் இருந்து தொடர்ந்து கடந்த 2மாதமாக தண்ணீர் திறந்துவிடப்படுவதால் காவிரி பாசன வாய்க்கால்களில் நீர்வரத்து இருக்கிறது, கிருஷ்ணாயபுரம், குளித்தலை, கரூர் ஒன்றிய பகுதிகளில் பயிர் சாகுபடியினை விவசாயிகள் மற்கொண்டிருக்கின்றனர். நெல், கரும்பு, வாழை பயிரிடப்பட்டிருக்கிறது. சில பகுதிகளில் மஞ்சள் பயிரிட்டுள்ளனர். அமராவதி பாசன பகுதியைப் பொருத்தவரை கடந்த ஒரு வாரமாகத்தான் தண்ணீர்வர ஆரம்பித்துள்ளது. போதுமான நீர் கிடைக்காத இடங்களில் சொட்டுநீர்ப் பாசன முறையை விவசாயிகள் பின்பற்றத் துவங்கியுள்ளனர். சொட்டுநீர்ப் பாசன முறையை அமைத்துக்கொள்ள சிறுகுறு விவசாயிகளுக்கு 100% மானியம் அளிக்கப்படுவதாக வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சிறு குறு விவசாயிகள் பயன்பெற ஏக்கருக்கு ரூ.43,816 வீதம் 100% மானியத்தில் 900 ஏக்கரில் சொட்டு நீர் பாசனம் அமைக்க திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. சொட்டுநீர் பாசனம் மூலம் 2மடங்கு தண்ணீர் மீதம் ஆகிறது. மகசூல் அதிகம் கிடைக்கிறது. களை கட்டுப்படுத்தப் படுகிறது. வருடம் முழுவதும் சாகுபடி செய்வதால் விவசாயிகளின் வருமானம் மும்மடங்கு அதிகரிக்கிறது. பயறு வகைகள், எண்ணை வித்து உற்பத்திக்கும் இம்முறையை கடைபிடித்து அதிக மகசூல் பெறலாம் என அவர்கள்தெரிவித்தனர்.

**துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ரூ.57.85 லட்சத்துக்கு பருத்தி ஏலம்**

திருச்சி: துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் சென்ற பருவத் தில் ரூ.57.85 லட்சம் பருத்தி ஏலம் விடப்பட்டுள்ளது என்று விவசாயி கள் குறை தீர் கூட்டத்தில் தகவல் தெரிவிக்கப்பட்டது. திருச்சி கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நேற்று நடந்தது. வேளாண்துறை மூலம் செயல்பட்டு வரும் வேளாண் பணிகள் குறித்து

வேளாண் இணை இயக்குனர் (பொ) மதியழகன், தோட்டக்கலை துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து துணை இயக்குனர் சந்திரசேகரன் மற்றும் அதிகாரிகள் பேசினர். கலெக்டர் ஜெயஸ்ரீ பேசுகையில், திருச்சி மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு 762 மி.மீட்ட ராகும். செப்டம்பர் முடிய பெய்ய வேண்டிய சராசரி மழையளவு 405.40 மி.மீ. இதுவரை பெறப்பட்ட மழையளவு 284.70 மி.மீ. கடந்தாண்டில் இம்மாதம் முடிய 270 மி.மீ மழை பெய்துள்ளது. திருச்சி மாவட்டத்தில் உள்ள டெல்டா பகுதிகளில் 87,250 ஏக்கரிலும், டெல்டா இல்லாத பகுதிக ளில் 62,750 ஏக்கரிலும் சம்பா சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டு நடவுப் பணி முழுவீச்சில் நடந்து வருகிறது. இதுவரை டெல்டா பகுதிகளில் 2,606 எக்டேரில் திருந்திய நெல் சாகுபடி முறையிலும், 6,500 எக்டேரில் சாதாரண முறையிலும், டெல்டா இல்லாத பகுதிகளில் 340 எக்டேரில் நடவு பணிகள் முடிந்துள்ளது. நடப்பு சம்பா பருவத்துக்கு தேவை யான உரங்கள் யூரியா 5,436 மெ.டன், டிஏபி 3,150 மெ.டன், பொட்டாஷ் 4,317 மெ.டன் மற்றும் கூட் டுரம் 5,725 மெ.டன்னும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மற்றும் தனியார் உரக்கடைகளில் போதியளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது

வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில் துறையூர் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் சென்ற பருவத்தில் பிப்ரவரி 5ம் தேதி முதல் மே 28ம் தேதி வரை நடந்த ஏலத்தில் 1,214 குவிண்டால் பருத்தி ஏலம் விடப்பட்டது. இதன் மொத்த மதிப்பு ரூ.57,85,134 ஆகும். ஏலத்தில் 805 விவசாயிகள் பங்கேற்றனர். 65 வியாபாரிகள் ஏலம் எடுத்தனர். இதே விற்பனை கூடத் தில் ஜூலை 16ம் தேதி முதல் செப் 24ம் தேதி வரை 54,550 கிலோ சின்ன வெங்காயம் மறைமுகம் ஏலம் போனது. மொத்த மதிப்பு ரூ.7,15,671 ஆகும். திருச்செந்துறை ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்தில் ஆகஸ்ட் 11ம் தேதி முதல் செப். 23ம் தேதி வரை நடந்த பொது ஏலத்தில் 3,760 வாழைத்தார்கள் ஏலம் போனது. மொத்த

மதிப்பு ரூ.6.95 லட்சமாகும். ஏலத்தில் 94 விவசாயிகள் பங்கேற்றனர். 45 வியாபாரிகள் ஏலம் எடுத்தனர். பருத்தி, சின்ன வெங்காயம், வாழைத்தார் உள்ளிட்ட ஏலத்தில் பங் கேற்ற விவசாயிகள் அனைவருக்கும் இடைத்தரகர்களின்றி கமிஷனின்றி உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்பட்டதுஎன்றார்.

**<u>நாகை மாவட்டத்தில் நடப்பாண்டு 1.10 லட்சம் ஹெக்டேரில் சாகுபடி</u>**

நாகை: நாகை மாவட்டத்தில் நடப் பாண்டு 4.85 லட்சம் மெட்ரிக் டன் சம்பா நெல் உற்பத்தி இல க்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நாகை கலெக்டர் முனுசாமி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:நாகை மாவட்டத்தில் நடப்பாண்டு குறுவை பருவத்தில் 28,630 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சம்பா சாகுபடி 1.10 லட்சம் ஹெக்டேரில் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பாண்டு சம்பா சாகுபடி உணவு உற்பத்தியில் 4.85 லட்சம் மெ.டன் நெல் உற்பத்தி செய்ய விவசாயிகள் ஒத்துழைப்பு தர வேண்டும். மேட் டூர், காவிரி ஆறு, கல்லணை கால்வாயிலிருந்து கடந்த ஆகஸ்ட் 14ம் தேதி முதல் நீர் திறக்கப்பட்டதை அடுத்து நாகை மாவட்ட விவசாயிகள் சம்பா சாகுபடியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். சாவித்திரி 1009 நீண்ட கால ரகம் மாவட்டத்தில் அதிக பரப்பளவில் பிரதான ரகமாக சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் என்.எல்.ஆர். 34449, பிபிடி 5204, ஆடு துறை 48, 44, 38, 39, கோ 43 போன்ற மத்திய கால ரகங்களும் பயிர் செய்யப்பட்டுள்ளது. சம்பா, தாளடி பருவத்தில் செப்டம்பர், அக்டோபர் மாதங்களுக்கு தேவையான விதைகள், ரசாயன உரங்கள், களைக்கொல்லிகள், நுண்சத்துக்கள் போதிய அளவில் வேளாண் விரிவாக்க மையங்கள், தொடக்க வேளாண் கூட்டு றவு சங்கங்கள், தனியார் விற்பனை நிலையங்களில் போதிய அளவில் இருப்பு வைக்கப் பட்டுள்ளது. விதை தரம் குறித்து வேளாண் உதவி இயக்குனர் தரக் கட்டுப்பாடு மற்றும் விதை ஆய்வு மற்றும் விதை சான்று அலுவலர் களின்

மூலமாக அவ்வவ்போது ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. நடப்பு சம்பா பருவத்தில் 46 ஆயிரம் ஹெக்டேரில் நேரடி விதைப் பாகவும், 66,700 ஹெக்டேரில் நடவு பயிராகவும் எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரை 40,696 ஹெக்டேரில் நேரடி விதைப்பும், 9600 ஹெக்டேரில் நடவு பயிராகவும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 168 ஹெக் டேரில் திருந்திய நெல் சாகு படி நாற்றங்காலும், 2074 ஹெக்டே ரில் சாதா நாற்றங்காலும் நடவு செய்ய தயார் நிலையில் உள்ளது. சம்பா பருவ மும்முனைப்பு இயக்கங்கள் ஒவ்வொரு வருவாய் கிராமங்களிலும் நடத்தப்பட்டு விவசாயிகளிடம் சான்று பெற்ற விதைகளின் முக்கியத்துவம், விதை நேர்த்தி, நாற்றங்கால் மேலாண்மை, நடவு வயல் தயாரிப்பு, பயிர் இடைவெளி பராமரிப்பு, களை மற்றும் நீர் மேலா ண்மை, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம், பூச்சி மேலாண்மை சார்ந்த தொழில்நுட்பங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டுள்ளது. இவ்வாறு கலெக்டர் தெரிவித்துள்ளார்.

**<u>நேரடி நெல் விதைப்பில் களை கட்டுப்படுத்தும் வழி கலெக்டர் ஆலோசனை</u>**

நாகை: நாகை கலெக்டர் முனுசாமி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:நேரடி நெல் விதைப்பில் களை கட்டுப்பாடு மேற்கொள்ள, ஏக்கருக்கு பைரசோசல்ப்யூரான் 80 கிராம் அல்லது ப்ரிட்டிலாகுலோர் 500 மிலி (களை முளைப்பதற்கு முன்) களைக்கொல்லியை 20 கிலோ மணலுடன் கலந்து நெல் விதைகள் முளைப்பதற்கு 3 நாட்கள் முன்னதாக சீராக வயலில் தூவி விட வேண்டும். மேற்கூறிய களைக்கொல்லிகளை பயன்படுத்தவில்லை என்றால் பிஸ்பைரிபேக் சோடியம் என்ற களைக்கொல்லியை ஏக்கருக்கு 80 மிலி என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கரைத்து விதைப்பு செய்த 12 முதல் 15 நாட்களில் பிளாட்ஜெட் நாசில் பொருத்தப்பட்ட கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும். களைக்கொல்லி

மருந்துகள் தெளிக்கும்போது வயலில் போதிய ஈரப்பதத்தை உறுதி செய்து பின்னோக்கி நடந்து சென்று இடைவெளிகள் இல்லாதவாறு தெளிக்க வேண்டும். நடவுப்பயிரில் களை மேலாண்மை மேற்கொள்ள, ஏக்கருக்கு 1 லிட்டர் பூட்டாக்குளோர் அல்லது பெண்டிமெத்தலின் (களை முளைக்கும் முன்) களைக்கொல்லியை 20 கிலோ மணலுடன் கலந்து நடவு வயலில் மெல்லிய படலமாக நீர்கட்டி நடவு செய்த மூன்றாம் நாள் சீராக தூவி விட வேண்டும். அதன் பின்பு 3 நாட்களுக்கு நீரை பாய்ச்சவோ, வடிக்கவோ கூடாது. மேற்கூறிய களைக்கொல்லிகளை பயன்படுத்தவில்லை என்றால் ஏக்கருக்கு பிஸ்பைரிபேக் சோடியம் 80 மிலி அல்லது 2,4,டி சோடியம் உப்பு 500 கிராம் களைக்கொல்லியை 200 லிட்டர் தண்ணீரில் கரைத்து நடவு செய்த 15ம் நாள் தெளிக்கலாம். பைரசோசல்ப்யூரான் சாத்தி என்ற வணிக பெயரிலும், பிரிட்டிலாகுளோர் ரிபிட் என்ற வணிக பெயரிலும், பூட்டாக்குளோர் மேச்சட்டி என்ற வணிக பெயரிலும், பெண்டிமெத்தலின் ஸ்டாம்ப் என்ற வணிக பெயரிலும், பிஸ்பைரிபேக் சோடியம் மேச்சோ, நாமினி கோல்டு, அடோரா ஆகிய வணிக பெயர்களிலும், 2,4,டி சோடியம் உப்பு பெர்னாக்சான் என்ற வணிக பெயரிலும் வேளாண். விரிவாக்க மையங்கள், தனியார் விற்பனை நிலையங்களில் விநியோகம் செய்யப்படுகிறது. சம்பா சாகுபடிக்குரிய களைக் கொல்லிகள் பிரிட்டிலாகுளோர் 1200 லிட்டர், 96 லிட்டர் பிஸ்பைரிபேக் சோடியம் களைக்கொல்லியும் வேளாண். விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டு மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தனியார் விற்பனை மையங்களில் 4160 லிட்டர் பிஸ்பைரிபேக் சோடியம் களைக்கொல்லியும், 3200 லிட்டர் பிரிட்டிலாகுளோர் களைக்கொல்லியும், 1000 கிலோ 2,4,டி சோடியம் உப்புக்களைக்கொல்லியும் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு கலெக்டர் தெரிவித்துள்ளார்.

**பசுந்தாள் உரப்பயிர் வளர்க்க பயிற்சி விவசாயிகளுக்கு அழைப்பு**

காரைக்கால்: காரைக்கால் வேளாண் அறிவியல் நிலையத்தில் டெயின்சா பசுந்தாள் உரப்பயிர் சிறப்பாக வளர்ந்துள்ளதால், அதன் நுணுக்கத்தை அறிய வருகை தருமாறு விவசாயிகளுக்கு நிலைய தலைவர் சுரேஷ் அழைப்பு விடுத்துள்ளார்.காரைக்கால் வேளண் அறிவியல் நிலையத்தில் கீரை, நவீனரக நெல், மீன், கோழி, முயல் உள்ளிட்டவைகள் விவசாயி களுக்கு கற்றுத்தரும் நோக்கில் வளர்க்கப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, ஒரு ஏக்கர் நிலத்தில் டெயின்சா எனும் பசுந்தாள் உரப்பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதன் வளர்ச்சியை, வேளாண் அறிவியல் நிலையத்தலைவர் சுரேஷ் ஆய்வு செய்தார். பின்னர், இது குறித்து சுரேஷ் கூறியது: வயல்களில் மண்ணின் இயல்பை மேம்படுத்த, பசுந்தாள் உரப்பயிர் முக்கிய பங்காற்றுகிறது. இந்த பசுந்தாள் மண்ணில் உள்ள நுண்ணுயிர்களின் செயல்பாட்டை அதிகரிக்க உதவுகிறது. இதன் மூலம் நெல் பயிருக்கு கிடைக்கவேண்டிய அனைத்து சத்துகளும் அதிகமாகவே கிடைக்கிறது. நெல் வயலில் நடவு செய்வதற்கு 40 நாட்களுக்கு முன் இந்த பசுந்தாள் உரத்தினை போடவேண்டும். முளைத்த 40 நாளில் இப்பயிரை அந்த வயல்களிலேயே உழுதுவிடவேன்டும். ஒரு சில வாரத்தில் அதுவே மக்கி நல்ல உரமாக மாறிவிடும். இதனை பயிர் செய்வது மிக எளிது மட்டுமின்றி நல்ல இயற்கை உரமென்பதால் அனைத்து விவசாயிகளும் இதனை தங்கள் வயல்களில் பயிரிட முன்வரவேண் டும். அதற்கான பயிற்சி யை எங்கள் நிலையம் இலவசமாகவே கற்றுத்தருகிறது. என்றார்.

**மண்வளம் பெருகி மகசூல் தரும் பசுந்தாள் உர பயிர் சாகுபடி வேளாண் அதிகாரிகள் அறிவுரை**

உத்தமபாளையம்1: பசுந்தாள் உர பயிர் சாகுபடி செய்தால் மண் வளத்தை பெருக்கி, நல்ல மகசூல் பெறலாம் என வேளாண்துறையினர் ஆலோசனை தெரிவித்துள்ளனர். இதுகுறித்து அவர்கள் கூறியதாவது:

அதிக மகசூல் பெற வேண்டும் என்றால் இயற்கை உரங்களை மண்ணில் இட வேண்டும். இதில் முக்கிய பங்கு வகிப்பது பசுந்தாள் மற்றும் பசுந்தழை உரங்களாகும். நடப்பு சம்பா சாகுபடிக்கு ஒருசில இடங்களில் பரவலாக ஆழ்குழாய் கிணறுகள் மூலம் நாற்றுகள் விடப்பட்டு 20 முதல் 30 நாள் வயதுடைய பயிர்களாக உள்ளன. நாற்று விடப்பட்ட இடங்களை தவிர்த்து மீதமுள்ள சாகுபடி நிலப்பரப்பில் பசுந்தாள் உரப்பயிர் சாகுபடி செய்து அதிக மகசூல் பெறலாம். பசுந்தாள் உரத்தில் தக்கை பூண்டு, கொழிஞ்சி, அகத்தி, சீமை அகத்தி, பிள்ளிபயிர் சிறந்தவையாகும். பயிர்வகை இனத்தை சேர்ந்த பசுந்தாள் உர பயிர்கள் காற்றில் உள்ள தழைச்சத்தை கிரகித்து 70 சதவீதம் வரை வேர் முடிச்சுகளில் நிலைநிறுத்தி, அதில் ஒருபகுதியை மண்ணில் சேர்ப்பதால் நிலம் வளமடைகிறது. மண் அரிப்பை தடுத்து இழப்பை தடுக்கிறது. மண்ணுக்கு வளம் சேர்ப்பது மட்டுமல்லாமல் பிடிப்பு பயிராகவும், நிழற்பயிராகவும், மூடு பயிராகவும், தீவன பயிராகவும் பயன்படுகிறது. மண்ணின் கரிம பொருட்களை அதிகரிக்க செய்கிறது. பசுந்தாள் எருவானது பயிரின் பேரூட்ட சத்தான தழைசத்து மண்ணில் இருந்து நீர் மூலம் விரயமாவதை தடுத்து நிறுத்த உதவுகிறது. நுண்ணூட்ட சத்துகளை உறிஞ்சி தன்னுடன் வைத்து கொண்டு பிறகு மண்ணில் உள்ள பயிருக்கு தேவைப்படும்போது எளிதில் கிடைக்க செய்கிறது. எனவே அனைத்து விவசாயிகளும் பசுந்தாள் உர பயிர்களை பயிரிட்டு பூக்கும் தருணத்தில் உழுது, மண்வளம் பெருகியுள்ள நிலத்தில் சாகுபடி செய்து அதிகமகசூல் பெறலாம்.

**<u>மலைப்பகுதிகளில் மழை பிள்ளையார் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு விவசாயிகள் மகிழ்ச்சி</u>**

போடி: தமிழக, கேரள மலைப்பகுதிகளில் பெய்யும் தொடர் மழையால் பிள்ளையார் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தமிழகம், கேரளாவை இணைக்கும் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் கடந்த சில நாட்களாக

பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் போடி சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள ஆறு, கண்மாய்கள் நிரம்பி வருகின்றன. மலைப்பகுதிகளில் பெய்யும் மழை கொட்டக் குடி, பிச்சாங்கரை ஆறு வழியாக பிள்ளையார் அணையை வந்தடைகிறது. இங்கிருந்து பாசனத்திற்கு தண்ணீர் பிரித்து அனுப்பப்படும். இந்த நீரை நம்பி கீழபரவு, மேலபரவு உள்ளிட்ட பகுதிகளில் விவசாய நிலங்கள் பயனடைந்து வருகின்றன. போதிய மழையின்றி கடந்த சில மாதங்ளாக வறண்டு கிடந்த பிள்ளையார் அணைக்கு, தற்போது தொடர் மழையால் நீர்வரத்து அதிகரித்துள்ளது. அணைக்கு வரும் நீரை இரண்டாக பிரித்து விவசாய நிலங்கள், வறண்டு கிடக்கும் கண்மாய்களுக்கு பிரித்து அனுப்பப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**<u>சோத்துப்பாறை அணையில் 2 நாளில் 20 அடி உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி</u>**

பெரியகுளம்: பெரியகுளம் பகுதியில் பெய்த மழையால் சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் 2 நாளில் 20 அடி உயர்ந்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். பெரியகுளத்தில் இருந்து 8 கிமீ தொலைவில் மேற்கு தொடர்ச்சி மலையடிவாரத்தில் சோத்துப்பாறை அணை உள்ளது. இந்த அணை 126 அடி உயரம் கொண்டது. தற்போது அணையில் 69.70 அடி தண்ணீர் உள்ளது. அணையில் 29.83 மில்லியன் கன அடி தண்ணீர் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 55 கன அடி தண்ணீர் வரத்து உள்ளது. அணையிலிருந்து பெரியகுளம் குடிநீருக்காக 3 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இந்த அணை நீர் மூலம் பழைய ஆயக்கட்டு பகுதிகளான பெரியகுளம், கண்மாய், தாமரைக்குளம் கண்மாய், பாப்பையன்பட்டி கண்மாய்களில் 1,892 ஏக்கரில் உள்ள விவசாய நிலங்கள், நூற்றுக்கணக்கான ஏக்கர் மறைமுக விவசாய நிலங்கள், புதிய ஆயக்கட்டு பகுதிகளான லட்சுமிபுரம் பகுதிகளில் உள்ள 1,060 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இவற்றில்

கிணற்று பாசனம் மற்றும் நீரோடை பகுதிகளை சேர்ந்த விவசாய நிலங்கள் பயன்பெறுவதோடு, நெல், வாழை போன்ற விவசாயங்கள் பயன்பெறும் என்று இப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

**விவசாயிகளுக்கு பயிற்சி**

பெரியகுளம்: காஞ்சிபுரம் மாவட்டம் திருக்கழுக்குன்றம் வட்டார விவசாயிகள் பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயிற்சி பெற்றனர். பெருநகர காய்கறி வளர்ச்சி திட்டத்தின் மூலம் விவசாய கண்டுநர் பயிற்சி சுற்றுலாவில் காஞ்சிபுரம் மாவட்டம் திருக்கழுக்கன்றம் வட்டார விவசாயிகள் 100 பேர் பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரியில் பயிற்சி பெற்றனர். அவர்களுக்கு பேராசிரியர் தவமணி பயிற்சி வழங்கினார். வாழையில் சொட்டுநீர் பாசனம் குறித்து சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியின் போது தோட்டக்கலை உதவி அலுவலர்கள் ரங்கராஜன், நடராஜன், விஜயராகவன் மற்றும் துரை உடனிருந்தனர்.

**காட்டுமன்னார் கோவில் பகுதியில் மானிய விலையில் களை கொல்லி மருந்துகள்**

காட்டுமன்னார்கோவில்: காட்டுமன்னார்கோவில் பகுதியில், வடவாறு, வடக்கு ராஜன் வாய்க்கால் மூலம் விவசாய பணிகள் நடைபெறுவது வழக்கம். ஒவ்வொரு ஆண்டும் மேட்டூர் அணை திறக்கப்பட்ட உடன் சம்பா பணிகளை மேற்கொள்வர். இந்த ஆண்டும் மேட்டூர் அணை முன்னரே திறந்தாலும் கீழணை தாமதமாக திறக்கப்பட்டது. இதன் காரணமாக விவசாயிகள் நேரடி நெல் விதைப்பு பணியில் ஈடுபட்டனர். தற்போது பயிர்கள் நன்றாக உள்ள நிலையில் களை கொல்லி மருந்துகளை விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர். கடந்த ஆண்டு வேளாண் மை துறை சார்பில் மானிய விலையில் விவசாயிகளுக்கு களை கொல்லி மருந்துகள் வழங்கப்பட்டது. இதனால் விவசாயிகள் எளிதில் குறைந்த விலையில் வாங்கி பயன்பெற்றனர். இந்நிலையில், தனியார் கடைகளில் களை கொல்லி

லிட்டர் ரூ.7 ஆயிரத்திற்கு விற்பனை செய்யப்படுவதாக விவசாய சங்க தலைவர் விநாயகமூர்த்தி குற்றம் சாட்டி வருகிறார். மானிய விலையில் களை கொல்லிகளை அரசு வழங்கினால் விவசாயிகள் அதிக விலைக்கு தனியார் கடைகளில் வாங்க வேண்டிய நிலை ஏற் படாது என கூறப்படுகிறது. கடந்த ஆண்டு மானிய விலையில் வழங்கியதால் விவசாயிகள் எளிதில் வாங்கி பயன்பெற்றனர். எனவே அரசு மானிய விலையில் களை கொல்லி மருந்துகளை விற்பனை செய்ய வேண்டும் என விவசாயிகள்எதிர்பார்க்கின்றனர்.

**<u>பரமத்திவேலூரில் வாழைத்தார் விலை உயர்வு</u>**

பரமத்திவேலூர், : நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் தாலுகாவில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் வாழை பயிரிடப்பட்டுள்ளது. இங்கு விளையும் வாழைத்தார்கள், உள்ளூர் மற்றும் ஏலம் மூலம் பரமத்திவேலூர் பஸ் நிலையம் அருகில் உள்ள தினசரி ஏல மார்க்கெட்டில் ஏலம் விடப்படுகிறது. கடந்த வாரத்தில் பூவன் வாழைத்தார் ரூ450க்கும், ரஸ்தாலி ரூ 500க்கும், கற்பூரவள்ளி ரூ 400க்கும், பச்சை நாடன் ரூ500க்கும், மொந்தன் வாழைக்காய் ரூ700க்கும் விற்பனை செய்யப்பட்டது. இந்த வாரம் பூவன் ரூ500க்கும், ரஸ்தாலி ரூ500க்கும், கற்பூரவள்ளி ரூ450க்கும், பச்சை நாடன் ரூ500க்கும், மொந்தன் வாழைக்காய் ரூ800க்கும் வியாபாரிகள் வாங்கிச் சென்றனர். வரத்து குறைவாக உள்ளதால் வாழைத்தார் விலை உயர்ந்துள்ளது. ஆயுத பூஜையை முன்னிட்டு விலை அதிகரித்துள்ளது.

**<u>அந்தியூர் விற்பனைக் கூடத்தில் ரூ.24.45 லட்சத்துக்கு விளைபொருள் ஏலம்</u>**

அந்தியூர்: அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் வாரந்தோறும் திங்கட்கிழமையன்று விவசாய விளைபொருட்கள் ஏல விற்பனை நடைபெறும். நேற்று 12 ஆயிரம் தேங்காய்கள் விற்பனைக்கு வந்து இருந்தன. இதில் ஒரு தேங்காய் ரூ.7.50 முதல் 18.50 ரூபாய் வரை

மொத்தம் ரூ.,1.5 லட்சத்துக்கு ஏலம் போனது. 100 மூட்டை தேங்காய் பருப்பு கிலோ ரூ.96.70 முதல் 105.66 வரை ரூ.2.5 லட்சத்துக்குவிற்பனை ஆனது. 20 மூட்டை எள், கிலோ ரூ.88.19 முதல் 109.29 வரை ரூ.1 லட்சத்துக்கும் 20 மூட்டை மக்காச்சோளம் கிலோ ரூ.12.56 முதல் 15.17 வரை ரூ.20 ஆயிரத்திற்க்கும் 1000 மூட்டை பி.டி. காட்டன் ரக பருத்தி கிலோ ரூ.39.00 முதல் 44 வரை மொத்தம் ரூ.18.25 லட்சத்திற்கும் ஏலம் போனது. 100 மூட்டை நிலக்கடலை விற்பனைக்கு வந்திருந்தது. இதில் பச்சை நிலக்கடலை கிலோ ரூ.18.60 முதல் ரூ. 33 வரையிலும், காய்ந்த நிலக்கடலை கிலோ ரூ.33 முதல் 43.12 வரை ரூ.1 லட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டது. மொத்த விவசாய விளைபொருட்கள் ரூ.24 லட்சத்து 45 ஆயிரத்துக்கு ஏலம் போனது.

**அரியலூர் மாவட்டத்தில் 5,400 ஹெக்டரில் திருந்திய நெல் சாகுபடி**

அரியலூர்: அரியலூர் மாவட்டத்தில் 95 கிராமங்களில் 5,400 ஹெக்டரில் திருந்திய நெல் சாகுபடிக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக கலெக்டர் சரவணவேல்ராஜ் தெரிவித்தார்.அரியலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் விவசாய குறைதீர் கூட்டம் நேற்று நடைபெற்றது. மாவட்ட கலெக்டர் சரவணவேல்ராஜ் தலைமை வகித்தார். அவர் பேசிய தாவது:அரியலூர் மாவட்டத்தில் ஆண்டு சராசரி மழை 954 மி.மீஆகும். இதில் கடந்த 2013 ஆம் ஆண்டு 624மி.மீ மழை மட்டுமே பெறப்பட்டது. கடந்த வருடம் ஆண்டு சராசரி மழையைவிட 330மி.மீ குறைவாகவே பெறப்பட்டது. நடப்பு ஆண்டில் இம் மாதம் இதுநாள் வரை 330மி.மீ மழை பெறப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டில் செப்டம்பர் மாதம் முடிய பெறப்பட்ட மழை அளவைவிட 13 மி.மீ கூடுதல் ஆகும். இதனால் சம்பா சாகுபடி பணிகள் மும்முரமடைந்துள்ளது.உரங்கள் வகையில் யூரியா 863 மெ.டன், டி.ஏ.பி 751 மெ.டன், பொட்டாஷ் 697 மெ.டன் மற்றும் காம்ப்ளக்ஸ் உரங்கள் 784 மெ.டன் ஆகியன செப்டம்பர் மாதம் முடியத்

தேவையான அளவு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மற்றும் தனியார் விற்பனை மையங்களில் இருப்பில் உள்ளது. மேலும் சம்பா பருவத்திற்கு இது வரை 216 மெ.டன் சான்று விதைகள் வேளாண்மை விரிவாக்க மையம் மூலமும் கூட்டுறவுத்துறை மூலம் 7 டன், தனியார் மூலம் 116 டன் என 339 மெ.டன் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. வேளாண்மை விரிவாக்க மையங்களில் 69 மெ.டன்னும், தனியார் வசம் 54 மெ.டன்னும் மற்றும் கூட்டுறவு துறையில் 10 மெ.டன் ஆக 133 மெ.டன் இம்மாத கையிருப்பில் உள்ளது.சம்பா நெல் சாகுபடி டெல்டா பகுதியில் 30,000 ஏக்கரிலும் மற்றும் டெல்டா அல்லாத பகுதிகளில் 30 ஆயிரத்து 750 ஏக்கரிலும் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டு அதற்கான தொழில்நுட்ப விழிப்புணர்வு முகாம்கள் வருவாய் கிராமங்கள் தோறும் நடத்தப்பட்டு வருகிறது. இந்த முகாமில் விதை நேர்த்தி, ரகம் தேர்வு, திருந்திய நெல் சாகுபடி முறை, இயந்திர நடவுமுறை, களை, பயிர் பாதுகாப்பு மற்றும் உரநிர்வாகம் குறித்து வேளாண் வல்லுநர்கள், விரிவாக்க அலுவலர்கள் செயல் விளக்கம் மற்றும் தொழில் நுட்பங்களை கடைப்பிடிக்க விவசாயிகளுக்கு பயிற்சி அளித்து உள்ளனர். திருந்திய நெல் சாகுபடி முழு கிராம அளவில் 95 கிராமங்களில் 5,400 ஹெக்டரில் செயல்படுத்தபட உள்ளது. இதன் மூலம் தேர்வு செய்யப்பட்ட கிராமத்தில் சாகுபடி செய்யப்படும் நெல் பரப்பு முழுவதும் திருந்திய நெல் சாகுபடி முறையில் கொண்டு வரப்படும், இதனால் 30, 40 சதவீதம் வரை நீர் சிக்கனம் மட்டுமில்லாமல் 20, 30 சதவீதம் வரை கூடுதல் மகசூல் பெறமுடியும். தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தில் நெல் நடவு இயந்திரம் மூலம் நடவு செய்வதற்கு ஹெக்டருக்கு ரூ.1,500 வீதம் 680 ஹெக்டருக்கு நெல் நடவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் ரூ.10.2 லட்சம் மானியம் வழங்கப்படவுள்ளது. நீடித்த நவீன கரும்பு சாகுபடி (2014 15)திட்டத்தின் மூலம் 290 ஹெக்டர் அளவில் கரும்பு சாகுபடி 100% மானியத்தில் சொட்டுநீர் பாசனம் அமைப்பு

மற்றும் இதர இடுபொருட்கள் வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெற விரும்பும் விவசாயிகள் சொட்டுநீர் அமைக்கவுள்ள தங்கள் நிலத்தின் சிட்டா, அடங்கல், நிலவரைபடம், குடும்பஅட்டை, புகைப்படம் (2) எண்கள் ஆகியவற்றுடன் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்களை தொடர்பு கொண்டு பயன் பெறலாம் என்றார். இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சடையப்ப விநாயகமூர்த்தி, வேளாண் இணை இயக்குநர் குணசேகரன் மற்றும் அலுவலர்கள் விவசாயிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தஞ்சையில் பரவலாக மழை

தஞ்சை: தஞ்சை மாவட்டத்தில் நேற்று மதியம் முதல் பரவலாக மழை பெய்தது.காவிரி டெல்டாவில் சம்பா சாகுபடி தற்போது தீவிரமடைந்துள்ளது. பல இடங்களில் நாற்றுவிடப்பட்டு நடவு பணிகள் துவங்கியுள்ளது. ஆனால் தொடர்ந்து பகலில் கடும் வெப்பம் நிலவி வந்தது. இதனால் கோடைபோல் அனல்காற்றும் வீசியது. நேற்று காலையும் கடுமையான வெப்பம் நிலவியது. ஆனால் மதியத்திற்கு மேல் மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. இதனால் கடந்த சில நாட்களாக நிலவிய வெப்பம் தணிந்து குளிர்ந்த காற்று வீசியது. தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியது. இதனால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். இம்மழை நீர் சம்பா சாகுபடி பணிகளுக்கு பயன்தரும் என்பதால் விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்தனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

**<u>நுண்ணுயிர் பயிர்களுக்கு அசோஸ்பைரில்லம் பயன்படும் விதம்</u>**

சேதுபாவாசத்திரம்: அஸோஸ்பைரில்லம் நுண்ணுயிர் பயிர்களுக்கு பயன்படும் விதம் மற்றும் செயல்பாடு குறித்து சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி விளக்க மளித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: அசோஸ் பைரில்லம் நுண்ணுயிர் ஒரு பாக்டீரியா வகையை சார்ந்தது. இது வளர்வதற்கு மிகக்குறைந்த அளவே காற்று போதுமானது. காற்றில் உள்ள தழைச்சத்தை கிரகித்து பயிர்களுக்கு அளிக்கிறது. நெல் மற்றும் பிற தானிய பயிர்களின் வேர் மண்டலத்தில் இணைந்து வாழும் நுண்ணுயிர். அஸோஸ்பைரில்லம் நுண்ணுயிரினை நெல், கம்பு, சோளம், கேழ்வரகு, பனிவரகு, தினை, சாமை, குதிரைவாளி போன்ற தானிய பயிர்களுக்கும், பருத்தி, சூரியகாந்தி மற்றும் கரும்பு போன்ற இதர பயிர்களுக்கும் பயன்படுத்தலாம். விதை நேர்த்தி செய்ய ஒரு பொட்டலமும் (200கிராம்), நாற்றுவிட்டு நடவு செய்யும் பயிர்களுக்கு நாற்றின் வேர்களை நனைக்க 2 பொட்டலமும் (400கிராம்), நடவு வயல் அல்லது நேரடி விதைப்பு செய்யும் நிலத்திற்கு ஏக்கருக்கு 4 பொட்டலம் (800 கிராம்) வீதமும் பயன்படுத்த வேண்டும். இந்த நுண்ணுயிர் பயன்படுத்துவதால் ரசாயன தழைச்சத்து உரம் இடுவதில் 25 விழுக்காடு குறைத்துக் கொள்ளலாம். தாவர வளர்ச்சி ஊக்கிகளை வேர் மண்டலத்தில் உண்டாக்குவதால் பயிரின் வளர்ச்சிகள் ஊக்குவிக்கப்படுகிறது. பயிர்களின் மகசூல் அதிகரிப்பதுடன் மண் வளம் பாதுகாக்கப்படுகிறது. இவ்வாறு விளக்கமளித்துள்ளார்.

## இயற்கை வேளாண்மை செய்வது எப்படி?

ராமநாதபுரம்: ராமநாதபுரம் மாவட்டத்தில் இயற்கை வேளாண்மை மற்றும ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்த நேரடி களப்பயிற்சி அக்.11, 12 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெறுகிறது. பயிற்சியில் விவசாயிகள் கலந்துகொண்டு பயனடையலாம் என கலெக்டர் நந்தகுமார் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் தெரிவித்துள்ளதாவது: கடந்த ஆண்டு `இனியெல்லாம் இயற்கையே என்ற தலைப்பில் இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் நேரடி களப்பயிற்சியில் இயற்கை வேளாண் தொழில் நுட்பங்கள் மற்றும் ஒருங்கிணைந்த பண் ணையம் குறித்து பயிற்சி அளித்தார். இப்பயிற்சியின் தொடர்ச்சியாக நடப்பு ஆண்டு செப். முதல் வாரம் இரண்டு நாட்கள் பயிற்சி நடைபெற்றது. இதில் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த 50 விவசாயிகள் பங்கேற்று பயனடைந்தனர். இதுபோன்ற நேரடிக் களப்பயிற்சி வரும் அக்.11 மற்றும் 12 ஆகிய இரண்டு நாட்கள் ராமநாதபுரத்தில் நடைபெறவுள்ளது. இதனை மாவட்ட நிர்வாகம் மற்றும் டேர் பவுண்டேசன் அமைப்பு இணைந்து நடத்த உள்ளன. நேரடி களப்பயிற்சியில் அனுபவமிக்க விவசாயிகள் மற்றும் விவசாய வல்லுநர்கள் பங்கேற்கின்றனர். இவர்கள் வாயிலாக, இயற்கை வேளாண்மை தொழில்நுட்பங்கள், ஆடு, மாடு, கோழி, மீன், தேன், மலர் மற்றும் அசோலா குறித்த ஒருங்கிணைந்த பண்ணைப்பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சி பெறுவதற்கு ஆர்வமுள்ள விவசாயிகள் முன்பதிவு செய்துகொள்ள வேண்டும். முன்பதிவில் 40 வயதிற்கு கீழ் உள்ள விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இரண்டுநாள் தங்கி பயிற்சி பெறுவதற்கு ரூ. 200 கட்டணம் செலுத்த வேண்டும். இது தொடர்பான கூடுதல் விபரங்களுக்கு 94434 65991 என்ற எண்ணில் தொடர்புகொள்ளலாம்.இவ்வாறு கலெக்டர் தெரிவித்துள்ளார்.

**<u>பரவலாக கொட்டியது மழை ராமநாதபுரத்தில் 53.2 மி.மீ. பதிவு</u>**

ராமநாதபுரம், :ராமநாதபுரம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு முதல், நேற்று காலை வரை பர வலாக மழை கொட்டியது. அதிகபட்சமாக ராமநாதபுரத்தில் 53.2 மி.மீ மழை பதிவானது. வானம் பார்த்த பூமி யான ராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளாக பருவமழை பொய் த்தது. இதனால் கண்மா ய்கள், ஊரணிகள் வறண்டன. நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளது. விவசாய கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் விவசாயிகள் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர். கமுதி, கடலாடி, முதுகுளத்தூர், சாயல்குடி, திருவாடனை, தேவிபட்டினம், திருப்பாலைக்குடி, உள்ளிட்ட பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இந்நிலையில், இந்த ஆண்டு பருவமழை பெய்யும் என எதிர்பார்த்து விவசாயிகள் கோடை உழவை தொடங்கினர். இருந்தும் பருவமழை பெய்யாததால் விவசாயிகள் கவலையில் ஆழ்ந்து வந்தனர். இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு மாவட்டத்தில் பரவலாக மழை பெய்யத் தொடங்கியது. நேற்று காலைவரை மழை நீடித்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். வறட்சியை தாங்கி வளரும் குதிரைவாலி, கேழ்வரகு உள்ளிட்ட சிறுதானியங்களை சாகுபடி செய்வதற்கான ஆயத்த பணிகளை விவசாயிகள் தொடங்கியுள்ளனர். நயினார்கோயில் ஒன்றியம் பாண்டியூர், அக்கிரமேசி உள்ளிட்ட பகுதிகளில் சிறுதானியம் சாகுபடி செய்வதில் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர். ராமநாதபுரம் நகரில் நேற்று பெய்த மழையில் வசந்தநகர், வெளிப்பட்டினம், ஓம்சக்திநகர், நாகநாதபுரம் உள்ளிட்ட பகுதிகளில் மழைநீர் தேங்கியது. ராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் மழைநீர் குளம்போல் தேங்கியது. நோயாளிகள் சிரமத்திற்கு ஆளாகினர். நேற்று காலை 8 மணி வரை மாவட்டத்தில் பெய்த மழையளவு (மி.மீ.)

வருமாறு:

ராமநாதபுரம் 53.2, பரமக்குடி 14, முதுகுளத்தூர் 35, கமுதி 41.5, வாலிநோக்கம் 44.2, கடலாடி 19.3, திருவாடனை 51.2, தொண்டி 9.2, வட்டானம் 45, தீர்த்தாண்டதானம் 24, ஆர்.எஸ்.மங்களம் 9, பாம்பன் 28.6. தங்கச்சிமடம் 49.2, ராமேஸ்வரம் 12.2, மண்டபம் 33.5, பள்ளமோர்குளம் 16, சராசரி மழையளவு 30 மி.மீ என்ற அளவில் பதிவானது.

## 5½ அடி நீள புடலங்காய்



திருப்பூர் மாவட்டம் முத்தூர் அருகே உள்ள வேலாயுதம்பாளையம் குமலாங்காட்டு தோட்டத்தை சேர்ந்த நமச்சிவாயம் (41) என்ற விவசாயின் தோட்டத்தில் இயற்கை முறையில் வளர்ந்துள்ள 5.50 அடி நீள புடலங்காயை படத்தில் காணலாம்.